Registered as a NewsPaper

விலை ரூபா:10.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 2036 | புரட்டாதி-18 | 04-10-2005 | செவ்வாய்க்கிழமை | ஓசை-229



S.M கோல்ட் ஹவுஸ்

வவுனியா நகரில் அசல் 22 கரட் தங்க நகைகளை உங்கள் விருப்பத்திற்கேற்ப தெரிவு செய்து பெற்றுக்கொள்ள

S.M கோல்ட் ஹவுஸ்

இல:-46A, தர்மலிங்கம் வீதி, வவுனியா.

உரிமையாளர்:- S.M.சண்முகரத்தினம்.

T.P: 024-222 4247 (சி-12761)

# ரணிலை தொண்டமான் ஆதரிக்க சந்திரிகாவின் தூண்டுதலே காரணம்!

## ஜே.வி.பி. குற்றம் சாட்டுகிறது

*சிறிலங்கா சுதந்திரக்கட்சித்தலைவர் சந்திரிகா குமாரதுங்கவின் தூண்டுதலிலேயே ரனில் விக்கிரமசிங்கவை ஆதரிக்க இலங்கைத் தோட்டத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஆறுமுகம் தொண்டமான் முடிவெடுத்துள்ளதாக ஜே.வி.பி குற்றம் சாட்டியுள்ளது.*

இது தொடர்பாக கடந்த வாரம் ஐக்கிய தேசியக்கட்சித் தலைவர் ரணிலுடன் இறுதிச் சுற்றுப் பேச்சுக்களை ஆறுமுகம் தொண்டமான் நடாத்த சந்திரிகா ஒப்புதல் அளித்ததாகவும் ஜே.வி.பி. யினர் குற்றம் சாட்டுகின்றனர். சந்திரிகாவின் ஆசீர்வாதத்தில் தான் இ.தொ.கா.வின் அரசியல் காய்கள் நகர்த்தப்படுகிறது என்பது சந்திரிகாவின் வட்டாரத்திலிருந்து கிடைத்த நம்பகமான தகவல் என்றும் ஜே.வி.பி.யின் மூத்த தலைவர் ஒருவர் கூறியுள்ளார்.

ரணிலை ஆதரிப்பதன் மூலம் மகிந்த ராஜபக்ஷவுக்குமலையகத் தொழிலாளர்கள் வாக்குகளைத் தடுக்க முடியும் என்று கணக்கிட்ட

(12ஆம் பக்கம் பார்க்க)

## குண்டுப்புரளி

கட்டுநாயக்க வானூர்தி தளத்தில் இருந்து லண்டன் நோக்கி புறப்படவிருந்த வானூர்தியில் குண்டு வைக்கப்பட்டதாக வெளியான தகவலையடுத்து அந்த வானூர்தி மீண்டும் தரையிறக்கப்பட்ட சம்பவம் நேற்று இடம் பெற்றது.யு. எல் 3.00என்ற பயணிகள் வானூர்தி பிற்பகல் 1.54 இற்கு லண்டன் நோக்கி 257 பயணிகளுடன் புறப்பட்டது. எனினும் குண்டு எச்சரிக் கையை அடுத்து பிற்பகல் 2.34 மணியள

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஈ.பி.டி.பி. உறுப்பினர் யாழ்.இல் சுட்டுக்கொலை

யாழ்.கொக்குவில் வண்ணார் பண்ணைப்பிரதேசத்தில் நேற்றுக் காலை ஈ.பி.டி.பி. உறுப்பினர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார். கிருஸ்ணன் பரமேஸ்வரன் (வயது-42) என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டார். காலை 7.30மணியளவில் யாழ். சிங்கள மகாவித்தியாலயத்தில் பணிபுரியும் தனது மனைவியை பாடசாலைக்கு வழியனுப்பிவிட்டு திரும்பும் வழியில் இனந்தெரியாதோரின் துப்பாக்கிச் சூட்டிற்கு அவர் இலக்காகியுள்ளார். சங்கீத ஆசிரியராகவும் கிருஸ்ணன் பரமேஸ்வரன் பணியாற்றி வந்துள்ளார். இவரின் தலையிலும் மார்பிலும் நான்குசூட்டுக் காயங்கள் உள்ளன. துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்கான இடத்திலேயே அவர் பலியானார்.

## மகிந்தவின் தேர்தல் பரப்புரையில் தனது பெயரை பயன்படுத்த வேண்டாமென அநுரா கடிதம்

தனது முன்அனுமதியைப் பெற்றுக்கொள்ளாமல் மகிந்த ராஜபக்ஷவின் தேர்தல் பரப்புரைக் கூட்டங்களில் தனது பெயரைப் பயன்படுத்த வேண்டாம் எனவும், சுவரொட்டிகள், பதாகைகளில் மகிந்தவின் படத்துடன் தன்படத்தையும் இணைக்க வேண்டாம் எனவும் வெளிவிவகார அமைச்சர் அநுரா பண்டாரநாயக்க சிறிலங்கா சுதந்திரக்கட்சி தலைமைப்பீடத்திடம் வலியுறுத்திக் கூறியிருப்பதாக தெரியவருகின்றது.ஐ.நா. பொதுச்சபைக் கூட்டத்தில் கலந்து கொள்ள சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடன் அமெரிக்கா சென்ற அநுரா பண்டாரநாயக்க இன்னமும் நாடு திரும்பவில்லை. அவர் மகிந்த

(12ஆம் பக்கம் பார்க்க)

## வடமராட்சி குடத்தனையில் துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் பலி;

பருத்தித்துறை குடத்தனை வல்லிபுரம் கோவிலுக்கருகில் ஒருவரின் சடலத்தை சிறிலங்காப் பொலிசார் நேற்றுக் காலை கண்டு பிடித்துள்ளனர்.

எரிந்த நிலையிலேயே இந்தச் சடலம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இந்த நபர் மீது துப்பாக்கிச்சூடு நடத்திவிட்டு பின்னர் அவரை எரித்திருக்கலாமென பொலிசார் சந்தேகிக்கின்றனர்.

இப்பிரதேசத்தில் நேற்று முன்தினமிரவு துப்பாக்கிச் சூட்டுச் சத்தம் கேட்டதாக பிரதேச வாசிகள் தெரிவித்துள்ளனர்.

இறந்தவர் செந்தூர்ச்செல்வன் (வயது-21) என அடையாளம் காணப்பட்டுள்ளார். மணல் ஏற்றச்சென்றிருந்த உழவு இயந்திரம் எரியுண்ட நிலையில்

(12ஆம் பக்கம் பார்க்க)

## சனாதிபதித் தேர்தலில் யாரை ஆதரிப்பது? இடதுசாரிக் கட்சிகளிடையே குழப்பம்

சிறிலங்கா சனாதிபதித் தேர்தலில் யாரை ஆதரிப்பது என்பது தொடர்பாக சிங்கள இடதுசாரிக் கட்சிகளிடையே பிளவு ஏற்பட்டுள்ளது.

லங்காசமசமஜக் கட்சியின் தலைவரான பட்டி வீரக்கோன், சந்திரிகா தலைமையிலான சுதந்திரக்கட்சியின் கொள்கைகளையே தான் ஆதரிப்பதாகவும் தனிநபரான மகிந்தராஜபக்ஷவை ஆதரிக்கப் போவதில்லை என்றும் கூறியுள்ளார்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணாமல் அளிக்கப்படும் உறுதிமொழிகள் எதுவும் நடைமுறைப் படுத்தப்படமுடியாது என்று கூறிய பட்டி வீரக்கோன், ஜே.வி.பி மற்றும் ஜாதிக ஹெல உறுமயவுடன் மகிந்த ராஜபக்ஷ எப்படி உடன்பாடு வைத்துக்கொள்ள முடிந்தது என்பதை என்னால் நினைத்துப்பார்க்கவே முடியவில்லை என்றும் வீரக்கோன் தெரிவித்துள்ளார்.

தனிநபர்கள் கட்சியுடன் ஏற்படுத்

(12ஆம் பக்கம் பார்க்க)

## இணைப்பு

லெப் . கேணல் புலேந்திரன்,லெப். கேணல் குமரப்பா உட்பட பன்னிரு வேங்கைகளின் நினைவு வர்ணப்படம் இன்றைய ஈழநாதம் நாளேட்டுடன் இணைக்கப்பட்டுள்ளது.




## விக்டர் ஹெட்டிக்கொட கட்டுப்பணம் செலுத்தினார்

எதிர்வரும் சனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்காக ஐக்கிய இலங்கை பொதுஜன கட்சி சார்பில் விக்டர் ஹெட்டிக்கொட நேற்று கட்டுப்பணம் செலுத்தினார்.இதன் அடிப்படையில் இதுவரை எட்டுப் பேர் சனாதிபதித் தேர்தலுக்காக தமது கட்டுப்பணத்தை செலுத்தியுள்ளனர்.சோசலிச சமத்துவக் கட்சி, முற்போக்கு முன்னணி, ஐக்கிய தேசிய மாற்று முன்னணி, ஐக்கிய தேசியக் கட்சி, சிறிலங்கா தேசிய முன்னணி, புதிய

(12ஆம் பக்கம் பார்க்க)

- திருமலையில் கடற்படை பாதுகாப்பு வலயத்திற்குள் -

## கைதான 4 தமிழ் இளைஞர்களுக்கும் ஒக்ரோபர் 14 வரை விளக்கமறியல்

(திருகோணமலை)

திருகோணமலை கடற்படைப் பாதுகாப்பு வலயத்தினுள் பிரவேசித்து கடற்படைத் தளத்தை வீடியோ படம் பிடித்தார்கள் என்று கூறி கடற்படையினரால் கைது செய்யப்பட்டு பின்னர் துறைமுகப் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்ட நான்கு தமிழ் இளைஞர்களையும் திருகோணமலை நீதவான் வி. இராமகமலன் ஒக்ரோபர் 14ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கும்படி உத்தரவிட்டார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## சு.கட்சி குழுவினர் இன்று கூடி தே.விஞ்ஞாபனத்தைத் தயாரிப்பர்

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சனாதிபதித் தேர்தல் விஞ்ஞாபனத்தை தயாரிப்பதற்காக சனாதிபதியினால் அமைக்கப்பட்டகுழு இன்று கூடவுள்ளது.நேற்றைய தினம் இந்த குழு கூடவிருந்த போதும் பிரதிநிதிகளின் பிரசன்னத்தை உறுதிப்படுத்திக்கொள்ள முடியாமை காரணமாக அது கூடவில்லை.எனினும் இன்று நடைபெறவுள்ள குழுவின் கூட்டத்தில் தேர்தல் விஞ்ஞாபனம் தயாரிக்கும் பணிகள் முன்னெடுக்கப்படுமென அமைச்சர் சுசில் பிரேமஜயந்த் தெரிவித்துள்ளார். (32)

## சம்பூரில் விமான ஓடுபாதை சிங்கள ஊடகம் தகவல்

திருகோணமலை சம்பூர் பிரதேசத்தில் தமிழீழ விடுதலைப்புலிகள் விமான ஓடுபாதையொன்றை அமைத்திருப்பதாக பாதுகாப்புத் தரப்பிற்குத் தகவல் கிடைத்துள்ளதாக சிங்கள ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அதில் மேலும்தெரிவிக்கையில் ஆழிப்பேரலை நிவாரணப்பணியை பயன்படுத்தி இதற்குத் தேவையான பொருட்கள் அரசகட்டுப்பாட்டுப்பிரதேசத்திலிருந்து எதுவித தடையுமின்றி கொண்டு செல்லப்படுகிறது. இதில் சில அரச சார்பற்ற நிறுவனங்களுக்கும் தொடர்புள்ளன.

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஒக். ஏழு சூழல் பாதுகாப்பு முன்னோடி நாள் தமிழீழ சூழல் நல்லாட்சி ஆணையம் அறிவிப்பு

தமிழீழ சூழல் நல்லாட்சி ஆணையம் எதிர்வரும் ஏழாம் நாளை சூழல் பாதுகாப்பு முன்னோடி நாளாக அறிவித்துள்ளது.

இந்நாள் தொடர்பாக சூழல் நல்லாட்சி ஆணையம் அறிக்கையொன்றினையும் விடுத்துள்ளது.

அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது; எமது மண் ஆக்கிரமிப்பாளர்களின் பிடியிலிருந்து விடுவிப்பது மட்டுமல்லாது எமது தாயகத்தின் மண்வளம், நீர்வளம், வனவளம், தூயவளிவளம் அதன் உயிர் பல்வகைத் தன்மை என்பனவற்றை பேணிப்பாதுகாத்திடும் பொறுப்பு எங்கள் எல்லோருக்கும் உரியது.

எதிர்வரும் ஏழாம் நாளை சூழல் பாதுகாப்பு முன்னோடி நாளாக நாம் அனைவரும் கடைப்பிடிக்கும் இந்நாளில் எமது மண்ணில் சூழலைப்

(12ஆம் பக்கம் பார்க்க)

**Job Advertisement**

# Save the Children
in Sri Lanka

Save the Children in Sri Lanka (SCiSL) is an International Non Governmental Organization working for the rights and well-being of children, irrespective of nationality, race or religion. Together with children, we are helping to build a better world for present and future generations.

Vacancy exists for the following position.

**Position specifications**

| | |
|---|---|
| Job Title | **Project Development Officer – Child Protection** |
| Reporting to | **Partnership Development Manager** |
| Grade | D |
| Location | **Kilinochchi** |
| Salary | **Grade 1** |

**Job purpose**

Project Development Officer (PDO) is responsible for the day to day management of her / his assigned projects. The PDO is line managed by a Programme Specialist (PS) The PDO is also expected to take initiatives to improve the quality of the same projects.

**General Responsibilities**

- Providing relevant inputs for development of strategic and operational plans for the projects.
- Assisting in situation analysis for identifying and prioritising development needs in the context of child rights and the project(s).
- Assisting in developing qualitatively improved approaches to work.
- Assisting in developing and implementing appropriate engagement and exit strategies for projects.
- Assisting in developing proposals for approval.
- Responsible for monitoring of projects to ensure achievement of objectives.
- Producing high quality programme reports and other periodic reports sent to PS.
- Assist in research and advocacy initiatives.
- Sharing of learning and insights obtained through projects / programme work with other relevant staff.
- Participate in developing thematic expertise.

Any other relevant tasks delegated by the Line Manager from time to time.

**Specific Responsibilities**

**Define additional tasks / responsibilities for the particular post holder:**

**Administrative Responsibilities**

- Assisting in finalising project budget(s) and monitoring the same.
- Prepare periodic reports on budgets and expenditure of individual projects.
- Assist in providing training / facilitating workshops as required for internal HRD activities.

**Authority**

As delegated by her/ his line manager from time to time.

Person Specifications

*Essential*

- Graduate degree in social sciences or equivalent and preferably with at least 3 years of experience in development work.
- Good analytical skills and field experience in programme management.
- Understanding of development issues related to children.
- Ability to innovate along with a positive attitude to learn from communities.
- Skills related to participatory methods, computer literacy and financial management
- Good communication skills both written and oral. Fluency in English.
- Skills in report writing
- Good interpersonal and liaison skills.
- Ability and willingness to travel.

*Desirable*

- Exposure to development interventions in the area of child rights.
- Tri-lingual

| | |
|---|---|
| Job Title | Project Development Assistant – **Child Protection** |
| Reporting to | **Partnership Development Manager** |
| Grade | C |
| Location | **Kilinochchi** |
| Salary | **Grade 1** |

**Job Purpose:**

The PDA will assist in the Organization, Assessment, documentation and Community mobilization for reunification of separated, unaccompanied children. Moreover, the PDA will avail day to day cooperation with the family and partners doing social work in the community in order to provide services to make the family self supportive.

**Qualifications and experience:**

**Main Responsibilities:**

1. To take part in registration and family/caregivers assessments in order to give recommendation when it comes to reunification or placements in services or alternative care.
2. Assisting in situation analysis for identifying and prioritizing needs in the community, including security threats.
3. Assisting in identifying relevant partners to work with in order to contribute to the integration process.
4. Assisting the Project manager in developing qualitatively improved approaches to work.
5. To assist practically and emotionally in the family tracing and reunification in collaboration with partners (CRPO, Pos)
6. To assist in strengthening the family's abilities' to reintegrate separated and unaccompanied children in the family and in the community by home/follow up visits.
7. Sharing of learning and insights obtained through project/ partner/programme work with other relevant staff.
8. Any other relevant duties in line with the job purpose delegated by the line manager from time to time.

**Administrative Responsibilities:**

- Prepare and submit periodic activity reports. Assist in providing training/facilitating workshop as required.

**Authority:**

- As delegated by her/his line-manager from to time.

**Person Specifications:**
**Essential**

- Preferably educated to a University level or equivalent with 2 years experiences of NGO work.
- Good listening skills and field experiences in working with families.
- Understanding of separation, unaccompanied children and family reunification.
- Ability to innovate along with a positive attitude to learn from community.
- Skills related to good communication, to work in partnership, participatory methods and liaison.
- Willingness to work in community setting.
- Besides skills in report writing good written and oral communication skills.
- Ability and willingness to travel.
- At least valid Motor Bick driving licence for riding motor Bick.

(09ஆம் பக்கம் பார்க்க)

# சூறாவளிகளால் பெரிதும் பாதிக்கப்பட்ட லூசியானாவில் மீன்பிடித் தொழிலும் நாசம்

(வோஷிங்டன்)

**அமெரிக்காவைத்தாக்கிய 'கற்றினா' மற்றும் 'றீற்றா' சூறாவளிகளால் லூசியானா மாகாணத்தில் மீன்பிடித்தொழில் அடியோடு நசிந்து போகும் நிலை ஏற்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. அங்கு ஆண்டுக்கு ரூபா.12 ஆயிரத்து 375 கோடி வருவாய் தரும் மீன்பிடித் தொழில் மீண்டும் தலைதூக்க பல ஆண்டுகள் ஆகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

மெக்சிக்கோ வளைகுடாப் பகுதியில் அமைந்துள்ள லூசியானா மாகாணம் இரண்டு சூறாவளிகளால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. இந்த மாகாணத்தில் தெற்கு கடற்கரைப் பகுதி மீன்பிடித் தொழிலுக்கு பிரசித்தி பெற்றது. இங்குள்ள கடல் பகுதியில் கிடைக்கும் இறால் மீன் மற்றும் உணவு சிப்பிகள் புகழ் பெற்றவை. மீன்பிடித் தொழில் மூலம் ஆண்டுக்கு ரூபா.12 ஆயிரத்து 375 கோடி வருவாய் கிடைத்து வந்தது. சூறாவளிக்கு பின் அனைத்து மீன்பிடித் துறைமுகங்களும் அழிந்துவிட்டன. இறால் மீன்கள் ஏராளமான அளவில் இறந்து விட்டன.



அமெரிக்காவில் பர்பாங்க் பகுதியில் பற்றி எரியும் காட்டுத்தீ.

உணவு சிப்பிகள் கிடைப்பது அரிதாகிவிட்டது.

மீண்டும் இவ்வகை மீன்கள் கிடைத்தாலும் அவற்றை பிடிக்க தேவையான ஆயிரக்கணக்கான படகுகள் பழுதுபார்க்க முடியாத அளவுக்கு சேதமடைந்துவிட்டன. பரம்பரை பரம்பரையாக மீன்பிடிப்பதைத் தவிர வேறு தொழில் தெரியாத ஆயிரக்கணக்கான மீனவர்கள் செய்வதறியாமல் திகைத்துப் போயுள்ளனர்.

இங்குள்ள மிசிசிப்பி ஆற்றங்கரையில் எம்பையர் மற்றும் சில நகரங்கள் உள்ளன. இங்கு வசிப்பவர்கள் அனைவரும் மீனவர்கள். சூறாவளி வீசிய போது நகரத்தைவிட்டு வெளியே சென்றனர். தற்போது மீண்டும் சொந்த நகருக்கு சென்று பார்த்த போது எங்கும் இடிபாடுகளே காட்சியளிப்பதாக தெரிவித்துள்ளனர்.

அமெரிக்காவில் உணவு சிப்பிகள் உற்பத்தியில் லூசியானா முக்கிய பங்கு வகித்து வந்தது. தற்போது மூன்றில் இரண்டு பங்கு உணவு சிப்பிகள் உற்பத்தி பாதிக்கப்பட்டுவிட்டதாக வல்லுனர்கள் தெரிவித்துள்ளனர்.

லூசியானாவின் தெற்குப் பகுதியில் தான் மீன்பிடித் தொழிற்சாலைகள் ஏராளமான அளவில் இருந்தன. கடந்த ஓகஸ்ட் 29 ஆம் திகதி கற்றினா சூறாவளி வீசிய போது அதன் பாதையில் இப்பகுதி அமைந்துவிட்டது பெரும் பாதிப்பை ஏற்படுத்திவிட்டது.

லூசியானாவிலுள்ள லேக் சார்லஸ் நகரம் றீற்றா' சூறாவளியால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. இங்குள்ள மக்கள் வேலை வாய்ப்பை இழந்து தவித்து வருகின்றனர். இந்த நகரைச் சேர்ந்த ஹொவர்டு ஹாசெல்டான் சூறாவளிக்கு முன் இன்ஜினியராக வேலை செய்து வந்தார். தற்போது குறைந்த சம்பளத்தில் பார் ஒன்றில் களஞ்சிய முகாமையாளராக பணிபுரிந்து வருகிறார்.

அமெரிக்காவில் சூறாவளியால் வேலை வாய்ப்பு இழந்து தவிப்பவர்களின் எண்ணிக்கை 2.79 இலட்சமாக உயர்ந்துள்ளதாக தொழிலாளர் நலத்துறை தெரிவித்துள்ளது.



தைவான் தைபேயில் வீசிய சூறாவளியிலிருந்து குடையைக் காப்பாற்ற சிரமப்படும் பெண்கள்.

## தைபூன் சூறாவளி தைவானை தாக்கியது 34 பேர்காயம்; மின் விநியோகம் துண்டிப்பு

(தைபே)

தைபூன் சூறாவளி ஒன்று நேற்று முன்தினம் தைவான் நாட்டைத் தாக்கியது. அப்போது வீசிய பலத்த காற்றினால் வீடுகளில் உள்ள யன்னல்கள் உடைந்து 34 பேர் காயமடைந்தனர்.

இந்த சூறாவளி நேற்று முன்தினம் தைவான் வழியாக கரையைக் கடந்தது. அப்போது மணிக்கு 227 கி.மீ. வேகத்தில் கடுமையாக காற்றுவீசியது. கிழக்கு கடற்கரையில் உள்ள மலை நகரான ஹீலியன் மற்றும் மத்திய தைவான் வழியாக தைபூன் சூறாவளி கரையைக் கடந்து கலத்த காற்றினால் ஹீலியனில் உள்ள வீடுகள் மற்றும் கல்வி நிறுவனங்களின் கூரைகள் காற்றினால் பறந்து சென்றன.ஹீலியன் மற்றும் மத்திய தைவான் பகுதிகளிலுள்ள ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீடுகளில் மின் விநியோகம் தடைப்பட்டது.காற்றில் பறந்து வந்த கண்ணாடிகள் தாக்கியதில் 34 பேர் காயமடைந்தனர்.

சீனா, வியாட்னாம் மற்றும் தைவான் பகுதிகளில் ஆண்டு தோறும் கோடைகால தொடக்கத்தில் அடுத்தடுத்து சூறாவளிகள் தோன்றுவது வழக்கம்.தைவானில் கடந்த ஜூலையில் ஒரு சூறாவளியில்சிக்கி12 பேர் பலியாகினர்.கடந்த 2001 ஆம் ஆண்டு தோன்றிய தைபூன் சூறாவளியில் 200 பேர் கொல்லப்பட்டனர்.

## நேபாளத்தில் திடீர் வெள்ளம் 32 பேர் நீரில் அடித்துச்செல்லப்பட்டனர்

(காத்மண்டு)

நேபாளத்தில் கடந்த வாரம் ஏற்பட்ட திடீர் வெள்ளம் மற்றும் நிலச்சரிவில் சிக்கி 32 பேர் இறந்தாக அஞ்சப்படுகிறது.

காத்மண்டுவில் தாதேல்துலா மாவட்டத்தில் சிர்ஷா கிராமத்தில் கடந்த வாரம் வெள்ளம் மற்றும் நிலச்சரிவு ஏற்பட்டது. வெள்ளத்தில் 32பேர்அடித்துச்செல்லப்பட்டதாக நேபாள பத்திரிகைகள் தகவல் தெரிவிக்கின்றன.அடித்துச்செல்லப்பட்டவர்களில், இதுவரை பத்துப் பேரின் சடலங்கள் மட்டும் மீட்கப்பட்டதாகவும், மீட்புப் பணிகளில் அரசோ, பாதுகாப்புத் துறையோ எந்த ஈடுபாடும் காட்டவில்லை என்றும் பத்திரிகைகள் கூறுகின்றன.

# 77 எப் 16 விமானங்கள் நவீன ரகத்துடன் பாகிஸ்தானிற்கு விற்க அமெரிக்கா திட்டம்

(இஸ்லாமபாத்)

அமெரிக்காவிடம் இருந்து 77எப் 16 ரக விமானங்களை பாகிஸ்தான் வாங்கவுள்ளது. இந்த விமானங்கள் பிற நாடுகளில் இருந்து அமெரிக்காவால் வாங்கப்பட்டு சில நவீன ரக உபகரணங்கள் பொருத்தப்பட்டு விற்கப்படுகின்றது. அமெரிக்காவிற்கான பாகிஸ்தான் தூதர். ஜஹாங்கீர் கராமத் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது; எப்.16ரக விமானங்களை பிற நாடுகளிலிருந்து அமெரிக்கா வாங்கி சில நவீன மாற்றங்களை செய்து எங்களுக்கு வழங்கும். பாகிஸ்தானுக்கு தேவைப்படும் அளவில் இந்த விமானங்களில் மாற்றங்கள் செய்யப்படும். நவீன கருவிகள் பொருத்தப்படும். அமெரிக்க அரசு எப். 16ரக விமானங்களை பாகிஸ்தானுக்கு விற்க ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. இது பற்றி ஒக்ரோபர் அல்லது நவம்பரில் அமெரிக்க பாராளுமன்றிலும் விவாதிக்கப்படும். இது மற்ற நாடுகளில் இருந்து வாங்கப்பட்டதால் இதன் தரம் குறித்து கேள்வி எழுப்ப வேண்டிய அவசியம் இல்லை அனைத்து வகையிலும் மிகச் சிறந்ததாக இவை இருக்கும்.

கடந்த 1980 இல் வாங்கப்பட்ட 30 எப். 16 ரக விமானங்களிலும் இது போன்ற மாற்றங்கள் மேற்கொள்ளப்படும் இவ்வாறு அவர் தெரிவித்தார்.



நேற்று முன்தினம் தைவானைத் தாக்கிய தைபூன் சூறாவளியில் அகப்பட்டு சின்னா பின்னமாகிக் கிடக்கும் குடியிருப்புப் பகுதி.



வத்திக்கானில் உள்ள சென்ட்பீற்றர்ஸ் தேவாலயத்தில் போப் 16ஆவது பெனடிக்ட் சிறப்பு பிரார்த்தனை நடத்தினார். வத்திக்கானில் அகில உலக கிறிஸ்தவ மத பிஷப்புகள், கார்டினால்கள் கூட்டத்தை போப் நேற்று தொடக்கி வைத்தார்.

# அரசுடன் பேச்சுவார்த்தை நடத்துவது அர்த்தமற்றது நேபாள அரசியல் கட்சிகள்

(காத்மண்டு)

சனநாயகத்தையும், இறையாண்மையையும் காக்க மன்னருடன் பேச்சுவார்த்தை நடத்துவது அர்த்தமற்றது என்று நேபாள நாட்டு அரசியல் கட்சிகள் அறிவித்துள்ளன.

நேபாளத் தலைநகர் காத்மண்டுவிலிருந்து வெளியாகும் 'காத்மண்டு போஸ்ட்'பத்திரிகைக்கு அரசியல் கட்சித்தலைவர்கள் அளித்துள்ள பேட்டியில் இக்கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்தப்பேட்டியில் மேலும் கூறியிருப்பதாவது;

நேபாளத்தில் மன்னராட்சியை நீக்கிவிட்டு சனநாயக ஆட்சியை ஏற்படுத்த நாங்கள் விரும்புகிறோம். சர்வாதிகார மன்னராட்சியைத் தக்க வைத்துக்கொள்வதற்காக சனநாயகமும், மக்களின் இறையாண்மையும் நசுக்கப்படுவது வாடிக்கையாகிவிட்டது. மக்களிடையே தனக்கு அதிக செல்வாக்கு இருப்பது போன்ற மாயையில் மன்னர் இருந்தால் மக்களின் எண்ணம் என்ன என்பதை அறிய அவர் நேரடியாகக் களத்தில் இறங்க வேண்டும். மக்கள் விரும்புவது சர்வாதிகார மன்னராட்சியா, சனநாயகரீதியான குடியரசு ஆட்சியா என்பது விளங்கி விடும்.

சமீபத்தில் இங்கு சுற்றுப்பயணம் செய்த இந்திய தலைவர்கள் மீது அரசால் ஏவிவிடப்பட்ட 'தேசிய வாதிகள்' கல் வீசி தாக்குதல் நடத்தி கறுப்புக்கொடி காட்டிய சம்பவம் அரசின் முட்டாள் தனத்தை சர்வதேச நாடுகளுக்கு வெளிச்சம் போட்டுக்காட்டிவிட்டது இவ்வாறு அந்தப் பத்திரிகையில் செய்தி வெளியாகியது.

## லல்லு பொம்மைகளுக்கு அதிக கிராக்கி

பீகாரில் நடக்கும் சுற்றுலா கண்காட்சியில் லல்லுப் பிரசாத்தின் உருவப் பொம்மைகள் அமோகமாக விற்பனையாகின்றன.

பீகார் தலைநகர் பாட்னாவில் மாநில அரசின் கீழ் இயங்கும் பீகார் சுற்றுலா கழகத்தின் சார்பில் கண்காட்சி நடக்கிறது. இதில் ரயில்வே அமைச்சர் லல்லுப்பிரசாத்தின் உருவப் பொம்மைகள் அனைவரின் கவனத்தையும் கவர்ந்துள்ளது. லல்லு பிரசாத் போலவே உள்ளங்கைகளை மறைக்கும் வகையில் நீண்ட முழுக்கைச் சட்டையும் நெற்றியில் விழும் வெள்ளை முடியுமாக பொம்மை வடிவமைக்கப்பட்டுள்ளது. இறப்பரால் செய்யப்பட்ட இந்த பொம்மை அதிகமாக விற்பனையாகிறது.

## கோர புகையிரத விபத்து முப்பதிற்கும் மேற்பட்டோர் பலி

இந்திய மத்திய பிரதேச மாநிலம் வாரணாத் அருகே நேற்றுக்காலை ஏற்பட்ட புகையிரத விபத்தில் முற்பதிற்கு மேற்பட்டோர் உயிரிழந்தனர். 40 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்

வாராணாசியில் இருந்து குவோலியே சென்று கொண்டிருந்த அதிவேக புகையிரதம் நாட்டியா அருகே தடம் புரண்டதால் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

இந்த விபத்தில் புகையிரத இயந்திரமும் ஆறு பெட்டிகளும் தடம் புரண்டதில் காயமடைந்தவர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.



சீனாவில் தேசிய நாள் கொண்டாட்டத்தை முன்னிட்டு எருதுச் சண்டை போட்டிகள் நடைபெறுவது வழக்கம். இதனை முன்னிட்டு நடத்தப்பட்ட எருதுகள் மோதும் காட்சி.

# தமிழீழ பெண்கள் எழுச்சிநாளை முன்னிட்டு வவுனியாவில் பெண்கள் அமைப்புக்களின் மாநாடு

(வவுனியா செய்தியாளர்)

தமிழீழ பெண்கள் எழுச்சி நாளை முன்னிட்டு வவுனியாவில் எதிர்வரும் சனிக்கிழமை பெண்கள் மாநாடு ஒன்று நடைபெறவுள்ளது.

வவுனியா மாவட்டபெண்கள் அமைப்புக்கள் ஒன்றிணைந்து ஏற்பாடு செய்துள்ள இம் மாநாடு முத்தையா மண்டபத்தில் காலை 9.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை நடைபெறவுள்ளது.

இப்பெண்கள் மாநாட்டில் வவுனியா மாவட்டத்தில் உள்ள பல் வேறு பெண்கள் அமைப்புக்களை சேர்ந்த ஆயிரத்திற்கும் மேற்பட்ட பேராளர்கள் கலந்து கொள்வார்கள் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (10)

# பெண்களுக்கான விழிப்புணர்வு; வதிவிடப் பயிற்சி வகுப்பு

(அலுவலக செய்தியாளர்)

திருமலை மாவட்டப் பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனத்தினரால் "சோஆ" நிறுவனத்தின் அனுசரணையுடன் பெண்களுக்கான விழிப்புணர்வு, முகாமைத்துவம் தொடர்பான வதிவிடப் பயிற்சி வகுப்புக்கள் கடந்த வெள்ளி, சனி ஆகிய இரு தினங்கள் நடாத்தப்பட்டுள்ளது.

இந் நிகழ்வானது கட்டைப் பறிச்சான் நெசவு மண்டபத்தில் திருமலை மாவட்ட பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவன இணைப்பாளர் செல்வி செ. றோஸ்மலர் தலைமையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் மூதூர் கிழக்குப் பிரதேசத்தைச் சேர்ந்த உப்பூறல், நல்லூர் இலக்கந்தை, இத்திக்குளம், சின்னக்குளம், நிலாக்கேணி ஆகிய ஆறு கிராமங்களைச் சேர்ந்த 30 பெண்கள் கலந்து பயன்பெற்றனர். (கு)

# சனநாயகத்திற்கான அத்திவாரம் சிறார்களின் உரிமைகள் பாதுகாப்பிலே தோற்றம் பெறுகிறது

## சிறுவர் தின விழாவில் தயா மோகன்

(மட்டக்களப்பு)

சனநாயகம் வீட்டில்தான் ஆரம்பமாகின்றது. பெற்றோருக்கும், பிள்ளைகளுக்கும் தத்தமது உரிமைகள், சுதந்திரப் பொறுப்புக்கள் ஆகியவற்றைப் பகிர்ந்து கொள்ளும் போது சனநாயகத்திற்கு அத்திவாரம் இடப்படுகின்றது. இவ்வத்திவாரம் பிற்கால வாழ்க்கையில் தனி மனிதன் சமுதாயத்திற்கு ஆற்றும் பணிக்கு பெரும் தாக்கத்தை உண்டாக்கும். இவ்வாறு அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் தயாமோகன் தெரிவித்தார்.

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு நேற்று முன்தினம் சனிக்கிழமை கஞ்சிகுடிச்சாறு கணேசா வித்தியாலயத்தில் வித்தியாலய அதிபர் கே.சதானந்தம் தலைமையில் சிறுவர் தின நிகழ்வு காலை 9.00 மணிக்கு இடம்பெற்றது. இதில் அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே தயாமோகன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில்; ஒவ்வொரு பிள்ளைகளுக்கும் பாதுகாப்பு, மேம்பாடு ஆகியன பிறப்புரிமை. தனது முடிவுகளில் பங்கு கொள்ளும் உரிமையும் அவர்களுக்கு உண்டு என சிறுவர் உரிமைச் சமுதாயம் கருதுகின்றது.

இதேவேளை ஒவ்வொரு பிள்ளைக்கும் நல்லாரோக்கியம் கல்வி மற்றும் மேம்பாட்டுக்கான வாய்ப்புக்களை பெறவும் சுரண்டல், துஷ்பிரயோகம் ஆகியவற்றில் இருந்து பாதுகாப்புப் பெறவும் உரிமை உண்டு என்ற தார்மீகக் கோட்பாட்டை அநேகமான நாடுகளிலும் கொள்கை வகுப்போர் பகிரங்கமாக ஏற்றுக் கொள்கின்றனர்.

இன்று நகரப் புறங்களில் இருக்கும் பாடசாலைகள் போன்று கிராமப் புறங்களிலுள்ள பாடசாலைகள் அபிவிருத்தி செய்து நல்ல கல்வித் தரங்களைக் கொண்ட நல்லொழுக்கமுள்ளவர்களாக்க நாங்கள் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றோம் என்றார்.

# மாணவர்களுக்கு பயிற்சிவகுப்பு

(வட்டக்கச்சி)

பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனத்தினரால் பிற் நிறுவனத்தின் நிதியுதவியுடன் மாயவனூர் கிராமத்தில் மாணவர்களுக்கான பயிற்சி வகுப்பு நடைபெற்றுள்ளது.

கடந்த சனிக்கிழமை காலை 9.00 மணியளவில் மாயவனூர் பொதுமண்டபத்தில் பயிற்சி வகுப்பு ஆரம்பமானது. மாணவர்களின் ஒழுக்கக் கட்டுப்பாடு, மாணவர் திறமை, மாணவர்களின் உரிமை,மாணவர் தொகை அதிகரிப்பு பற்றிய கருத்துரைகளை கிளி.மாவட்டபெண்கள் அபிவிருத்தி நிறுவன இணைப்பாளர் வினோ, கிளி.கல்வி வலைய ஆசிரிய ஆலோசகர் மோகன பாலன் ஆகியோர் வழங்கினார்கள். அத்தோடு மாணவர்கள் குழுக்களாகப் பிரிக்கப்பட்டு அவர்களுக்கு பாடம் சம்பந்தமான தலைப்பு ஒன்று வழங்கப்பட்டு சிறந்த கட்டுரைகளை எழுதிய மாணவர்கள் பாராட்டப்பட்டனர். அத்தோடு மாணவர்களின் கருத்துக்களும் கேட்டறியப்பட்டது. இந்நிகழ்விற்கு பல தரப்பட்ட பிரமுகர்கள் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது. (12)

# கருத்தரங்கு

(அலுவலக செய்தியாளர்)

சூழல் பாதுகாப்பு வாரத்தை முன்னிட்டு பாடசாலை மட்டத்திலான திண்மக் கழிவு முகாமைத்துவக் கருத்தரங்கு இன்று காலை 10.00 மணிக்கு கிளி. பாரதிபுரம் மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

றீடோ நிறுவன ஏற்பாட்டில் பாடசாலைகள் மட்டத்தில் மேற்படி கருத் தரங்கு முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (சோ)



சிறுவர் தினத்தை முன்னிட்டு மனித முன்னேற்ற நிலையம் (கியூடெக்) நிறுவன சிறுவர் அமைப்பைச் சேர்ந்த சிறுவர்கள் கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்றலிலிருந்து மாலை அணிவித்து ஊர்வலமாக கிளிநொச்சி புனித திரேசா ஆலயத்திற்கு அழைத்து செல்லப்படுவதனைப் படத்தில் காணலாம். (படம். சோதி)

## -வவுனியா தமிழ்தேசிய எழுச்சிநாள் தொடர்பாக-

# செயலணிக்குழு, வன்னி பா.உறுப்பினர்கள் புளியங்குளத்தில் புலிகளுடன் சந்திப்பு

(வவுனியா செய்தியாளர்)

வவுனியாவில் இம்மாதம் 27 ஆம் திகதி நடைபெறவுள்ள தமிழ்தேசிய எழுச்சி நாள் தொடர்பாக புளியங்குளத்தில் வவுனியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் புலிகளைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர். எழுச்சி செயலணிக்குழுவும் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களும் விடுதலைப்புலி களைச் சந்தித்து கலந்துரையாடி யுள்ளனர்.

நேற்று முன்தினம் 10.00 மணியளவில் புளியங்குளத்திற்கு வருகை தந்த செயலணிக் குழுவினரும் வன்னிப் பாராளுமன்ற உறுப்பினர்களும், வவுனியாமாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் ஞானம், தமிழீழ தேசிய எழுச்சிப்பேரவைப் பொறுப்பாளர் சஞ்சய் ஆகியோரைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

இக் கலந்துரையாடலின் போது செயலணிக்குழுவினரும் பாராளுமன்ற உறுப்பினர்களும் தாம் வவுனியாவில் நடாத்தவுள்ள தமிழ் தேசிய எழுச்சி நாள் தொடர்பாக போராளிகளிடம் விரிவாக விளக்கிக் கூறினர். (10)

# ஆயுர்வேத வைத்தியத்தின் மகத்துவத்தை உணர்த்த விழிப்பூட்டல் செயற்பாடு

(மட்டக்களப்பு)

மட்டு. மாவட்ட ஆயுர்வேத பாதுகாப்புச் சபை மக்கள் மத்தியில் ஆயுர்வேத வைத்தியத்தின் மகத்துவத்தை பரப்பும் நோக்குடன் பல பிரச்சார நடவடிக்கைகளை மேற்கொள்ள விருப்பதாக இச் சபையின் தலைவர் இராமநாதன் கலைவாணன் கூறினார்.

மூலிகைக் கண்காட்சி, ஆயுர் வேத மருந்து வகைகளின் கண்காட்சி, இலவச வைத்திய முகாம், அலங்கார ஊர்திகளின் பவனி, மக்கள் விழிப்புணர்வு வாரம், கொடிவாரம், முதலியன இதில் இடம் பெறுகின்றன.

இவ் விடயம் தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்; மட்டக்களப்பு மாவட்டத்தில் வடக்கு கிழக்கு மாகாண சபையின் நிர்வாகத்தின் கீழ் ஆறு ஆயுர்வேத மருந்தகங்களும், ஒரு ஆயுர்வேத வைத்தியசாலையும் உள்ளன. ஆனால் பொது மக்கள் இவற்றைப் புறக்கணித்து நடப்பதால் இவ் வைத்திய நிலையங்கள் நல்ல முறையில் இயங்கவில்லை. போதிய வைத்திய வசதிகள் இல்லாமலும், மருந்து வகைகளின் பற்றாக் குறையாலும் இவை மந்த நிலையிலேயே இயங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

# உலக சிறுவர் தினத்தில் சிறார்கள் கௌரவிப்பு

(முல்லை)

உலகசிறுவர் தினத்தை முன்னிட்டு சிறுவர்களின் கௌரவிப்பு நிகழ்வு முல்லை. பிரதேசத்தில் வெகு சிறப்பாக இடம்பெற்றுள்ளது.

சிலாவத்தை தற்காலிக குடியிருப்பில் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் 'யுனிசெப் நிறுவனம்' உழைக்கும் மகளிர் அபிவிருத்தி நிறுவனம், வேள்விசன் சேவாலங்கா ஆகியவற்றின் நிதியுதவியில் புகழருவி முன் பள்ளியில் மாணவர்கள் மாலை அணிவித்து கௌரவிக்கப்பட்டனர். தொடர்ந்து சிறுவர்களின் கலைநிகழ்வுகள் இடம்பெற்றன. நிகழ்வில் பாராட்டுரைகள் என்பனவும் இடம்பெற்றதோடு மாலைநேரக் கல்வியும் இடம்பெற்றது. இதேவேளை முல்லை பொருளாதார அபிவிருத்தி நிறுவனத்தால் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் எட்டுமுன்பள்ளிகளை ஒருங்கிணைத்து சிறுவர் தின நிகழ்வுகள் சிறப்பாக இடம்பெற்றுள்ளன. இதன் போது சிறுவர்கள் கௌரவிக்கப்பட்டு பரிசுப்பொருட்களும் வழங்கப்பட்டன. (20)

# இடம் பெயர்ந்த மக்களுக்கு நிரந்தர வீடுகள் கையளிப்பு

(திருமலை)

திருமலை கண்டி வீதியில் திருமலை நகரிலிருந்து 13 கிலோமீற்றர் தொலைவிலுள்ள விளாங்குளம் கிராமத்தில் வன் செயல் காரணமாக 20 வருடங்களுக்கு முன்பு இடம் பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள தமிழ்க் குடும்பங்களை மீளக் குடியமர்த்தும் திட்டத்தின் கீழ் திருகோணமலை றோட்டரிக் கழகம் நிர்மாணித்து வரும் நிரந்தர வீடுகளை மீளக் குடியமர்ந்து வரும் பயனாளிகளுக்குக் கையளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் இடம் பெற்றது.

இலங்கை றோட்டரி கழக ஆளுநர் நிஹால் போக ஹலந்தே முதலாவது வீட்டை திறந்து வைத்தார். திருகோணமலை றோட்டரிக் கழகத்தின் தலைவர் ஏ.கிஸ்ட் ஜே.சிங்கராயர் வட்டின் திறப்பை மீளக் குடியமர்ந்த குடும்பத்தின் தலைவர் வேலுப்பிள்ளை யோகராஜாவிடம் கையளித்தார்.

10.3 மில்லியன் ரூபா செலவில் விளாங்குளம் கிராமத்தில் மீளக்குடியமரும் மக்களுக்கான வீடமைப்புத் திட்டம் மேற்கொள்ளப் பட்டிருப்பதாக திருகோணமலை றோட்டரிக் கழகத்தின் செயலாளர் ஆர். ராஜாராம் மோஹன் தெரிவித்தார்.

பிரிட்டன், அமெரிக்கா ஆகிய நாடுகளிலுள்ள றோட்டரிக் கழக உறுப்பினர்களின் பங்களிப்புடன் தான் இவ் வீடமைப்புத் திட்டம் உருவானதாகவும், அவர் தெரிவித்தார். மீளக் குடிய மரும் மக்களுக்கு வாழ்வாதார உதவிகளை வழங்குவதற்கும் றோட்டரிக் கழகம் தயாராக இருப்பதாகவும் அவர் கூறினார். (25)


## நேர்முகப் பரீட்சை

மன்னாரில் தொண்டர் ஆசிரியர்களுக்கான நேர்முகப் பரீட்சைகள் இன்றும் நாளையும் மன்னார் கல்வி வலையத்தைச் சேர்ந்த 180 பேருக்கும், 6ஆம் திகதி மடு கல்வி வலையத்தை சேர்ந்த 130 பேருக்கும் அந்தந்த கல்வி வலையங்களில் நடைபெறவுள்ளன.இந்த நேர்முகப்பரீட்சைக்கு சமுகமளிப்பவர்கள் முதலாம் திகதி முதலாம் மாதம் 2004 ஆம் ஆண்டுக்கு முன்னர் கஷ்டபிரதேசம் மற்றும் அதிகஷ்ட பிரதேசம் ஆகியவற்றில் பணியாற்றியிருக்கவேண்டும்.அத்துடன் கல்விப் பொதுத்தராதர உயர்தரப்பரீட்சையில் சித்தி பெற்றிருக்க வேண்டும் என மன்னார் வலயக் கல்விப்பணிப்பாளர் எம். ஏ. ஹெவல் தெரிவித்தார்.

# தமிழ் தேசிய எழுச்சிப்பிரகடனத்திற்கு வலுச்சேர்க்க அவுஸ்திரேலிய சிட்னி நகரில் மாபெரும் ஒன்று கூடல்











அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரில் நேற்று முன்தினம் நடைபெற்ற மாபெரும் ஒன்றுகூடல் நிகழ்வில் ஆயிரத்திற்கும் அதிகமான மக்கள் கலந்து கொண்டு வவுனியா பிரகடனத் திற்கு வலுச்சேர்த்துள்ளனர். இதன்போது அவுஸ்திரேலிய பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்பட பல அவுஸ்திரேலிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

ஈழத்தமிழ் மக்களின் சுயநிர்ணயப் போராட்டத்தின் முக்கிய திருப்பு முனைகளில் ஒன்றாக அமைந்தது யூலை 27 2005 அன்று வவுனியாவில் இடம்பெற்ற மக்கள் பிரகடனமாகும். தமிழீழ மண்ணை ஆக்கிரமித்து நிற்கும் அன்னிய சிங்களப்படைகள் எம் மண்ணை விட்டு வெளியேறவேண்டும் என்றும், தமிழர் தேசிய விடுதலைப் போராட்டத்தை சர்வதேச சமூகம் அங்கீகரிக்க வேண்டும் என்றும் இப்பிரகடனம் வேண்டிநிற்கின்றது. இப்பிரகடனத்திற்கு ஆதரவாக சிட்னியில் நேற்று முன்தினம் மாபெரும் ஒன்றுகூடல் இடம் பெற்றது.

ரைட் நகர சபை மண்டபம் நிரம்பிவழிய, ஆயிரத்திற்கும் அதிகமான தமிழ் மக்கள் உணர்ச்சி பொங்க கலந்து கொண்டனர்.

அகவணக்கத்தைத் தொடர்ந்து பொதுச்சுடரை சிட்னியில் உள்ள முப்பதிற்கும் மேற்பட்ட சமய, சமூக, கல்வி விளையாட்டு சங்கங்களின் பிரதிநிதிகள் ஏற்றிவைத்தனர். தென் துருவ தமிழ்ச் சங்கங்களின் சம்மேளனத் தலைவர் ஆ.பரராஜசிங்கம் வரவேற்புரையை நிகழ்த்தினார்.

இந்த ஒன்றுகூடலில் வவுனியாப் பிரகடனத்திற்கு தமது ஆதரவைத் தெரிவித்து, அவுஸ்திரேலிய அரசின் ஆதரவை வேண்டி நிற்கும் அறிக்கையை, சிட்னி தமிழ் அறிவகத்தின் தலைவர் கருணாகரன் வாசித்தார். மண்டபம் அதிரும் வகையில், திரண்டிருந்த மக்கள் கரகோசம் செய்து வரவேற்றனர். அவுஸ்திரேலிய பாராளுமன்ற உறுப்பினர்கள், அவுஸ்திரேலிய மனித உரிமைகள் செயற்பாட்டாளரும் சர்வதேச சட்ட நிபுணர்கள் சபைத்தலைவருமான ஜோன்டௌட் , கிறிஸ்தவசபையின் தலைவர்கள், மாநகரசபை முதல்வர்கள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டு உரையாற்றினார்கள்.

பாராளுமன்ற உறுப்பினர் யோன் மேர்ஃபி தனது செய்தியில் தமிழர்களின் தாயகத்தை ஆக்கிரமித்து நிற்கும் சிங்கள இராணுவம் வெளியேற வேண்டும் எனக்கேட்டுக் கொண்டார்.

இதில் ஜோன்டௌட் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை சர்வதேச சமூகம் அங்கீகரிக்க வேண்டும் என வேண்டுகோள் விடுத்தார் சிறிலங்கா அரசு யுத்தத்தை மறந்து தமிழ் தேசியப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணவேண்டும் என பலரும் வலியுறுத்தினர்.

வவுனியாப் பிரகடனம், அதன் முக்கியத்துவம், அதன் பின்னால் புலம்பெயர்ந்து வாழும் உறவுகள் அணிதிரள வேண்டியதன் அவசியம் என்பன பற்றிய பேச்சுக்கள் இடம் பெற்றன. தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் சிட்னிப் பணியக அரசியல் பரப்புரைப் பொறுப்பாளர் மயில்வாகனம் தனபால சிங்கம், இன்பத்தமிழ் ஒலி 24 மணிநேர தமிழ் வானொலி இயக்குநர் பாலசிங்கம் பிரபாகரன், அவுஸ்திரேலிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபன அறிவிப்பாளர் திருமதி சௌந்தரி சிவாநந்தன் ஆகியோர் உரையாற்றினர்.

புதுவை இரத்தினதுரையின் பாடலுக்கு உணர்ச்சியுடன் அபிநயம் செய்த நர்த்தனாலயா நுண்கலைக்கல்லூரி பத்மரஞ்சனி உமாசங்கரின் மாணவி, சிவானுஜா உமாசங்கரின் நாட்டியம் நெஞ்சை நெகிழ வைத்தது.

சிவரதி கேதீஸ்வரனின் மாணவி யதுகிரி லோகதாசன், தமிழ் மக்கள் மனதில் விடுதலை உணர்வைத் தூண்டும் பாடல்களை இசைத்தார். மண்டபம் நிறைந்த, இந்தக் கூட்டத்தில், முதியவர்கள், இளைஞர்கள், சிறுவர்கள் என சிட்னிவாழ் தமிழ் சமூகத்தின் அனைத்துப் பிரிவினரும் கலந்து கொண்ட இந்த எழுச்சி எம்மக்களின் தணியாத தாகத்திற்கு மேலும் வலுவூட்டும் என நம்பலாம்.

# உந்துருளியில் பயணித்த இருவரை யானை தூக்கி வீசியது!

## வவுனியா பெரிய மடு வீதியில் சம்பவம்

(அலுவலக செய்தியாளர்)

உந்துருளியில் பயணித்த இருவரை யானை தூக்கி வீசியது. எனினும் அதிஷ்ட வசமாக இருவரும் பாரிய காயங்கள் எதுவுமின்றி தப்பித்துக் கொண்டனர். மேற்படி சம்பவம் நேற்றுக்காலை 6.00 மணியளவில் வவுனியா பெரிய மடு வீதியில் இடம் பெற்றுள்ளது.

தேசிக் காயுடன் மாங்குளம் நோக்கி மேற்படி இருவரும் உந்துருளியில் பயணிக்கையில் திடீரென காட்டுக்குள் இருந்து வீதியை குறுக்கறுத்த யானையின் பின் கால்பகுதியில் உந்துருளி மோதிய போது உந்துருளியுடன் இருவரையும் துதிக்கையால் தூக்கி எறிந்தது. இதில் இருவரும் அதிஷ்ட வசமாக காயங்கள் எதுவுமின்றி தப்பியதுடன் உந்துருளியும் சேதங்கள் இன்றி தப்பியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மார்க்கண்டு உதயகுமார், தாமோதரம், குணரட்ணம் ஆகிய இருவருமே மேற்படி சம்பவத்தில் காயங்கள் எதுவுமின்றி தப்பியவர்களாவார். (சோ)

# திருமலையில் வழமைக்கு மாறாக கடலட்டைகள் கரையொதுக்கம்

(திருமலை)

கடற்கோளினால் ஏற்பட்ட கால நிலை மாற்றம் காரணமாக திருகோணமலைக் கடலில் குறிப்பாக மட்டிக்களி குடாவில் கடலட்டைகள் ஏராளம் கரையொதுங்குவதாக தெரிவிக்கப்படுகின்றது. கடலட்டைகளை மீனவர்கள் பிடித்து ஒன்று 40 ரூபா வீதம் விற்று வருகின்றனர். மீன்பிடி முதலாளிகள் அவற்றை வாங்கி பாரஊர்திகள் மூலம் கொழும்புக்கு ஏற்றுமதி செய்து வருகின்றனர். கடலட்டை வியாபாரத்தில் பலர் ஈடுபட்டுள்ளதைக் காண முடிகிறது. இதேநேரம் கடலட்டை பிடித்தவர்களில் சிலரைப் படையினர் கைது செய்து பொலிசாரிடம் ஒப்படைத்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (25)

# சைவநெறித் தேர்வு-2005

சைவ பரிபாலண சபை வழமையாக நடாத்தும் சைவ நெறித் தேர்வு (தரம் 2-12)வரை வரும் நவம்பர் மாதம் 11 ஆம் திகதி நடைபெறும். இவ் வருடம் 89,720 மாணவர்கள் தோற்றுகின்றார்கள். தேர்வு யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, கண்டி, புத்தளம் ஆகிய மாவட்டங்களில் 502 தேர்வு நிலையங்களில் நடைபெறும். தரம் 12 இந்து சமயம் இந்து நாகரீகம் ஆகிய இரண்டு பாடங்களிலும் தேர்வுகள் நடைபெறும்.

# "விழி" மருத்துவ இதழ் வெளியீடு

(அலவலகசெய்தியாளர்)

கிளிநொச்சி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினரின் மாதாந்த சுகாதார வெளியீடான ஒக்ரோபர் மாத மருத்துவ இதழ் விழி வெளியிடப்பட்டுள்ளது.

உடல் நிறை அதிகரிப்பும் உணவுப் பழக்கமும் எனும் தலைப்புச் செய்தியுடன்,முறிவுகள், வேலைக்கு செல்லும் தாயும் தாய்ப்பால் ஊட்டலும்,இளம் பருவத்தினரின் தூய்மையைப் பாதுகாத்துக்கொள்வோம். எனும் சுகாதாரச்செய்திகளுடன் வாழ்க்கை ஒரு கேள்விக் குறி எனும் சிறுகதையுடனும் இதழ் 61 மருத்துவ இதழ் விழி வெளி வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# சிறார்களிடமுள்ள பல்வேறு திறமைகளை முன்பள்ளி ஆசிரியர்களே வெளிக்கொணர வேண்டும்

சிறார்களிடம் பல வகைப திறமைகள் மறைந்து கிட அவற்றைக் கண்டு க வேண்டிய பொறுப்பு முனபள்ளி ஆசிரியர்களுடையதே. சிறுவர்களுடைய ஆற்றல்களை எவ்வாறு வளர்க்கலாம் என்பதில் ஆசிரியர்கள் அதிக ஆர்வம் காட்ட வேண்டும் என வடக்குக் கிழக்கு மாகாணக் கல்விச் செயலாளர் இரா. தியாகலிங்கம் தெரிவித்தார்.

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வடக்குக் கிழக்கு முன்பள்ளிச் சிறார்களின் கண்காட்சியும், கலை விழாவும் கடந்த சனிக்கிழமை மருதமுனை அல்மனார் மத்திய கல்லூரியில் நடைபெற்ற போது பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே தியாகலிங்கம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கல்முனை வலயக்கல்விப் பணிப்பாளர் எம்.ரி.ஏ.நிஸாம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் வடக்குக் கிழக்கிலுள்ள 14 கல்வி வலயங்களைச் சேர்ந்த முன்பள்ளிச் சிறார்களின் காட்சிப் பொருட்கள் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன. இங்கு கல்விச் செயலாளர் தியாகலிங்கம் தொடர்ந்து உரையாற்றுகையில்:-

சிறுவர்களுடைய வாழ்வு சிறப்பாக மலர வேண்டும் என்பதே எமது நோக்கமாகும். அதற்கான வழி காட்டல்களை கல்வியாளர்கள் மேற் கொள்ள வேண்டும். சிறார்களின் உச்சத்திறமையை வெளிக் கொண்டுவர இவ்வாறான நிகழ்வுகள் தொடர்ந்து நடத்தப்பட வேண்டும் என்று கூறினார். நிகழ்வில் பெருந்தொகையான தமிழ், முஸ்லிம், சிங்கள முன் பள்ளி ஆசிரியர்களும், மாணவர்களும், சிறார்களும் கலந்து கொண்டு கலை நிகழ்ச்சிகளை அரங்கேற்றினர்.

# சுயதொழில் வாய்ப்பிற்கு நிதியுதவி

(திருகோணமலை)

மாவட்ட சகவாழ்வு மன்றத்தின் கீழ் இயங்கும் மக்கள் மன்றத்தினால் போரின் போது கணவனை இழந்த பெண்களுக்கும், அதிக பிள்ளைகளைப் பெற்ற குடும்பத் தலைவர்களுக்கும், வறுமைக் கோட்டின் கீழ் மூவின மக்களுக்கும் சுய தொழில் வாய்ப்பொன்றை மேற் கொள்வதற்காக 20 ஆயிரம் பெறு மதியான காசோலை வழங்கப்பட் டன.

இந் நிகழ்வு திருமலை நகர சபை மண்டபத்தில் நேற்று முன் தினம் காலை 9.30 மணியளவில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் திரகோணமலை பத்திரகாளி மண்டபத்தில் நேற்று முன் தினம் காலை 9.30 மணியளவில் நடை பெற்றது. இந் நிகழ்வில் திருகோணமலை பத்திரகாளி அம்மன் ஆலய பூசகர் சோ.ரவிச்சந்திரக் குருக்கள் சகவாழ்வு மன்ற இணைப்பாளர் வை. ஜெயமுருகன், திருகோணமலை பட்டணமும் சூழலும் மேலதிக பிரதேச செயலாளர் திருமதி ஜனதீபன் ஆகியோர் கலந்து கொண்டு இக் கொடுப்பனவுகள் வழங்கினர்.

# சர்ச்சைகள் நிறைந்துள்ள பீகார் தேர்தல் களம்

பீகார் சட்டசபை எதிர்வரும் 18ஆம் திகதி முதல்கட்ட தேர்தலைச் சந்திக்கவுள்ளது என்று தேர்தல் ஆணையகம் அறிவிப்புச் செய்துள்ளது. அதற்கு முன்னரே பீகார் ஆளுநர் சட்ட சபையினைக் கலைப்பதற்கு சிபார்சு செய்தும் விட்டார்.ஆனால்பீகாரில் தேர்தல் களை யினைத்தான் காணமுடியவில்லை. ஏனோ தானோ என்றுதான் எல்லா கட்சிகளுமே பிர சாரத்தில் ஈடுபடுகின்றன.

இதற்கு யாது காரணம் ...... எதிர்வரும் 18ஆம் திகதி பீகார் சட்டசபையின் முதற்கட்ட தேர்தல் நடைபெறுமா.... இல்லையா... என்பதே இதற்கான பிரதான காரணமாகும். ஏனெனில் ஆளுநர் பூட்டாசிங், பாரதிய ஜனதாவின் தேசிய ஜனநாயக கூட்டணியைச் சேர்ந்த நிதிஷ்குமார் தலைமையில் பீகாரில் ஆட்சியமையும் சூழல் இருந்தபோதும் ஏனோ அப்படி அமைக்க வில்லை.மாறாக சட்டசபையினைக் கலைப் பதற்கு சிபாரிசு செய்திருந்தார்.இது செல்லாது என்று பாரதியஜனதாவின் முன்னாள் மந்திரிகள் உச்ச நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்துள்ளனர்.

இதனையடுத்தே பீகார் தேர்தல் உண்டா... இல்லையா.... என்று எல்லாக் கட்சிகளுமே தலையை உடைத்துக்கொண்டிருக்கின்றன. அது மட்டுமன்றி உச்ச நீதிமன்றமும் தனது அதிரடியான தீர்ப்பினாலும் கட்சிகளை குழப்பத்தில் ஆழ்த்தியுள்ளது.

எவ்வாறெனில்... ஆளுநர் பூட்டாசிங்கின் அறிவிப்பு செல்லாதெனில் எதிர்வரும் 18ஆம் திகதிக்குமுன்னரே தீர்ப்பளிப்பதாகவும் ஆளுநரின் அறிவிப்பு செல்லுபடியாகுமெனில், 18 ஆம் திகதிக்குப் பின்னர் தீர்ப்பளிப்பதாகவும் இரு வேறுபட்ட தீர்ப்பினை அறிவிப்புச் செய்திருக்கின்றது.

இதனால்தான் பீகார் சட்டசபைத்தேர்தலில் தேர்தல் போட்டியிடும் எல்லாக் கட்சிகளுமே ஆளுநரின் அறிவிப்பு செல்லாது என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பு வழங்கிவிட்டால் என்ன செய்வது... என்று திக்கு முக்காடிக் கொண்டிருக்கின்றன.

அதுமட்டுமன்றி உச்ச நீதிமன்றத்தீர்ப்பு பாரதிய ஜனதாவின் தேசிய ஜனநாயக கூட்டணிக்கு சாதகமாகிவிடும் பட்சத்தில் பீகாரில் நிதிஷ்குமார் தலைமையில் ஆட்சி யமைந்துவிடும்.அதன்பின்னர் ஏனையகட்சிகள் தலையில் முக்காடு போட்டுக் கொள்ள வேண்டியதுதான் எனும் நிலையும் உருவாகிவிடும்.

மறுபுறம் ஆளுநரின் சிபாரிசு செல்லு படியாகும் என்று உச்ச நீதிமன்றம் 18ஆம் திகதிவரை மௌனம் காக்குமானால், அது தேர்தலுக்கு வழி சமைக்கும். அதன் பின்னர்தான் எல்லாக்கட்சிகளும் நீ பிடி நான் பிடியென பிரச்சாரத்தில் குதிக்கும். எனவே இரண்டாம் கட்டத்திலிருந்துதான் பீகார் தேர்தல் களைகட்டும். முதலாம் கட்டம் சோபை இழந்துதான் காணப்படும். என்றும் நம்பலாம்.

இவ்வாறான சிக்கல்களினால்தான் பீகார் இப்போது அமைதியாகவுள்ளது. ஆனால் தேர்தலில்போட்டியிடும் கட்சிகளோ உச்ச நீதிமன்றத்தீர்ப்பை எதிர்பார்த்து திரிசங்கு சொர்க்கத்தில் இருக்கின்றன. என்பது தான் உண்மை.

என்றாலும் எதிர்வரும் 18 ஆம் திகதி முதல் கட்ட வாக்குப்பதிவு நடைபெறும்என்று வைத்துக்கொண்டு, அங்குள்ள நிலைமைகளை நோக்கின்....

தேர்தல் களத்தில் எட்டுக் கட்சிகள் இறங்கவுள்ளன.காங்கிரஸ்,பாரதிய ஜனதா கட்சி,ராஷ்டிரிய ஜனதாதளம் , ஐக்கிய ஜனதா தளம், லோக் ஜனசக்தி தேசியவாத காங்கிரஸ், சமாஜ்வாடி, இந்திய கம்யூனிஸ்ட்டு, பகுஜன் சமாஜகட்சி போன்ற கட்சிகளே வழமைபோன்று தேர்தல் தொகுதிகளை வலம் வருகின்றன.

இம்முறை ஐக்கிய முற்போக்கு கூட்டணி என்று காங்கிரஸ் 51இடங்கள், ,ராஷ்டிரிய ஜனதாதளம்175 இடங்கள் (லல்லு பிரசாத்யாதேவ்), மார்க்சிய, கம்யுனிஸ்ட் ஒன்பது இடங்கள் தேசியவாத காங்கிரஸ் எட்டு இடங்கள், (சரத்பவார்) ஆகியோர் இணைந் துள்ளனர்.

கடந்த பெப்ரவரி மாதம் நடந்தபீகார் தேர்தலில் இந்தக் கூட்டணி அமைந்திருக்க வில்லை.மாறாக ராஷ்டிரிய ஜனதாதளம் (லல்லு) தனித்து 200 இடங்களில் போட்டியிட்டது வெறும் 75 இடங்களை மட் டுமே பெற்றது.

அதேபோல் காங்கிரஸ் தனித்து 83 இடங்கில் போட்டியிட்டது மிகக் குறைந்த பட்சமாக பத்து இடங்களை மட்டுமே பிடித்துக் கொண்டது.அதேபோல் தேசியவாத காங்கிரஸ் மூன்று இடங்களையும் மார்க்சிஸ் கம்யூனிஸ்ட் மூன்று இடங்களையும் தமதாக்கியமை முடிந்த தேர்தல் கதை..

அதனால் எவருமே பெரும்பான்மை பெறமுடியவில்லை. தொங்கு பாராளுமன்றம் ஏற்படும் அவலம் உருவானது. ஆனாலும் கடந்த தேர்தலில் லோக்ஜனசக்தி (ராம்விலாஸ் பஸ்வான்) பெரியளவில் பேசப்பட்டது. லோக் ஜன சக்தியை ராஷ்டிரிய ஜனதா தளமும் (லல்லு), ஐக்கிய ஜனதா தளமும்(நிதிஷ்குமார்) தம்முடன் கூட்டணிக்குள் இழுக்க எவ்வளவோ முயற்சிகளை கைக்கொண்டன. ஆனால் ராம்விலாஸ் பஸ்வானோ தன்னுடைய செல்வாக்கினை காப்பாற்றி அதனைத் தக்க வைத்துக்கொள்ளாது விமர்சனங்களில் ஈடுபட்டார்.

பீகாரை லல்லு-ராப்றிரிதேவி பிடியிலிருந்து விடுவித்துவிட்டதாக பெருமை பேசினார். ஐக்கிய ஜனதாவுடன் சேர்வதற்கு இன்னோ ரன்ன நிபந்தனைகளை விதித்தார். இதனால் எவருடனும் கூட்டணியமைத்துக் கொள்ள முடியாத நிலையினை தமக்குத் தாமே உருவாக்கியதாக அவரது கட்சியினரே அவரை விமர்சித்த நிலையுண்டு.

இதனால் 29 அங்கத்தவர்களைக் கொண் டிருந்த அவரது கட்சியினால்தான் பீகரில் குடியரசுத் தலைவர் ஆட்சிஅமைக்க நேரிட்டதாக பீகார் மக்கள் விசனப்படுவதாக அரசியல் ஆய் வாளர்களின் கருத்து.

ஏனெனில்,பீகாரில் லல்வின் செல்வாக்கு சரிந்துவிட்டதையே கடந்த தேர்தல் பெறுபேறு காட்டியதாகவும் பாரதிய ஜனதா கூட்டணியின் பக்கம் மக்கள் திசை திரும்பி விட்டதாகவுமே விமர்சிக்கப்பட்டது.

அதனால்தான் பஸ்வான் பாரதிய ஜனதா, ஐக்கிய ஜனதா தளத்துடன் இணைந்து ஆட்சியமைக்க உதவ வில்லை என்பது பெரிய சர்ச்சைகளை உருவாக்கியதாகவும் கருத்து தோன்றுகின்றது.

இல்லையேல் கடந்த மே மாதம் 24ஆம் திகதி தேசிய ஜனநாயக கூட்டணி கதவடைப்புப் போராட்டம் நடத்தியது. இதனை பீகார் மக்கள் ஆதரித்ததாகவும் அதனால் தான் அவர்கள் தேசிய ஜனநாயக கூட்டணியை ஆதரிப்பது தெரியவந்ததாகவும் கூட கூறப்படுகிறது. அதனால்தான் மக்கள் பஸ்வானுக்களித்த சந்தர்ப்பத்தை அவர் நழுவ விட்டு விட்டதாக விமர்சனம் எழுந்தது அப்போது.

இதேவேளை தேர்தல் ஆணையகமும் புதிய அதிரடிகளை வீசியிருக்கின்றது. பீகாரில் பல்வேறு வழக்குகளில் அறுபதாயிரம் பேர் (60,000) தலைமறைவாக இருப்பதனால் அவர்களைக் கைது செய்யுமாறும் பீகார் அரசுக்கு தேர்தல் ஆணையகம் உத்தரவிட்டிருக்கின்றது. தலைமறைவாக இருப்பவர்களது பெயரை வாக்காளர் பட்டியலிலிருந்து நீக்குமாறும் அவர்கள் தேர்தலில் போட்டியிட வேட்புமனுத் தாக்கல் செய்திருப்பின் அதனை நிராகரிக்க மாறும் தேர்தல் தொகுதிகளுக்கு ஆணை பிறப்பித்திருக்கின்றது.


அ.கலைவாணி

இதனையடுத்து தேசிய ஜனநாயக கூட்டணியைச் சேர்ந்த வினோத்குமார் கயாமும்பாசில் தொகுதிக்கு வேட்பு மனுத் தாக்கல் செய்ய வந்தபோது கைது செய்யப்பட்டு சிறையில தள்ளப்பட்டுள்ளார்.

இதேவேளை ராஷ்டிரிய ஜனதா தளத்தைச் சேர்ந்த லல்லு பிரசாத் யாதேவ் மீது பலவித வழக்குகளில் புலன் விசாரணை அதிகாரிகள் குற்றச் சாட்டுக்களைப் பதிவு செய்துள்ளமை பரபரப்பை ஏற்படுத்த தவறவில்லை எனலாம்.

பீகாரின் முதலமைச்சராக லல்லு பிரசாத் யாதேவ் பதவி வகித்த போது கால்நடை தீவன ஊழல் வழக்கு இவர் மீது சுமத்தப்பட்டது. இதனால் 1997இல் லல்லு தனது முதலமைச்சர் பதவியை துறக்கும் நிலை ஏற்பட்டது. இப்போது இந்த வழக்கு புதிய அவதாரம் எடுத்துள்ளது. கால்நடை தீவன ஊழல் லல்லு பிரசாத் உட்பட 150 பேர் மீது குற்றச்சாட்டுகள் பதிவு செய்வதில் பாட்னா நீதிமன்றம் அக்கறை காட்டுகிறது. லல்லு பிரசாத் மீதும் முன்னாள் முதல்வர் ஜகன்னாத் மிஸ்ரா மீதும் குற்றச் சாட்டுகள் பதிவு செய்யப்பட்டும் இருக்கின்றது.

இதேபோல்தான்,ராஞ்சி கருவூல வழக்கும் புத்துயிர் பெற்றிருக்கின்றது. 1988- 1996 காலப்பகுதிகளில் 182.87 கோடி ரூபா கையாடல் செய்ததாக லல்லுபிரதாத் யாதேவ் மீதும் அதே முன்னாள் முதல்வர் ஜகன்னாத் மிஸ்ரா மீதும் குற்றச்சாட்டுக்கள் பதிவாகி யுள்ளன.



லல்லு

அத்துடன் ஜார்க்கண்டில் தியோகார் கருவூலகத்தில் 97 இலட்ச ரூபா கையாடல் செய்ததாக இவர்கள் இருவர் மீதுமே கடந்த வாரம் குற்றச் சாட்டுக்கள் பதிவு செய்யப்பட் டிருக்கின்றன.

எனவே லல்லு பிரசாத்தின் புகையிரத அமைச்சர் பதவி கேள்விக் குறியாகும் என்று விமர்சிக்கப்படுகையிலேயே தேர்தல் நடைபெறும் என்ற எதிர்பார்ப்பும் நிலவுகின்றது.

ஏற்கனவே மூன்று வழக்குகளில் குற்றச் சாட்டுக்கள் பதிவு செய்யபட்டுள்ள லல்லு பிரசாத்யாதேவை தேர்தல் ஆணையகம் தேர்தலில் களமிறங்க அனுமதிக்குமா.. என்பது சந்தேகத்தை உருவாக்கியுள்ளது.

அவ்வாறு தேர்தல் ஆணையகம் அனுமதிக்குமானால் தேசிய ஜனநாயக கூட்டணி அமளியில்ஈடுபடுவது உறுதி ஏனெ னில் ஏற்கனவே அவர்களது கட்சி நபரே கைது செய்யப்பட்டிருக்கின்றார் அதனால் அக் கட்சிகூட்டணிவாய்மூடி மௌனிக்கு மென்பது எதிர்பார்க்க முடியாத ஒன்று

எனவே பீகார் தேர்தல் எதிர்வரும் 18ஆம் திகதி முதல்கட்டம் நடை பெறுமா... இல் லையா.... என்பது உச்ச நீதிமன்றத்தீர்ப்பில்தான் இருக்கின்றது.

அதேவேளை லல்லுபிரசாத் யாதேவ் பலவித குற்றச் சாட்டுக்களால் சுற்றி வளைக்கப் பட்டுள்ள போதும் அவர் தேர்தல் நடைபெறு மானால் களமிறங்குவாரா..... தேர்தல் ஆணையகம் அனுமதிக்குமா.... இல்லையேல் அவரது அரசியல் எதிர்காலம் எப்படி இருக்கும்.... என்ப வற்றை நாம் பொறுத் திருந்துதான் காணமுடியும் எனலாம்.




பஸ்வான்



நிதிஷ்குமார்



ராப்ரிதேவி



சரத்பவார்



# விளையாட்டு அரங்கு

ஜெயந்திரன்

## வரலாறு தந்த பாடம்



**தொடர்ந்து** இரண்டுமுறை உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரை வென்றதுடன் சுமார் 16 வருடங்களாக வரலாற்று புகழ்மிக்க ஆஷஸ் கிண்ணத்தை கைப்பற்றி வைத்திருந்த அவுஸ்திரேலிய அணி இம்முறை கிண்ணத்தை இங்கிலாந்திடம் பறிகொடுத்து வெறுங்கையுடன் நாடுதிரும்பியது இன்றும் கூட சிலருக்கு அதனை ஜீரணிக்கமுடியாது இருக்கலாம். எனினும் இதனால் வியப்படைந்தவர்களும் இல்லாமலிருக்க முடியாது. அதே போன்று விமர்சனங்களையும் தெரிவித்தே வருகின்றனர்.

இந்தத் தொடரின் தோல்வியை முன்கூட்டியே அறிவிக்கும் ஒன்றாக அமைந்தது அவுஸ்திரேலிய அணி இங்கிலாந்தின் பிராந்திய அணியான சமர்செட் அணியுடனான பயிற்சிப்போட்டியில் கண்ட தோல்வியாகும்.

கடந்த யூன் மாதம் 15ஆம் திகதி நடைபெற்ற அப்போட்டியில் அவுஸ்திரேலியா நான்கு விக்கெட்டுக்களால் தோல்விகண்டது. இந்தத் தோல்வி சாதாரண நிகழ்வாக அவுஸ்திரேலிய அணியும் உலக ஊடகத்துறையினரும் அவுஸ்திரேலிய இரசிகர்களும் பாராமுகமாக இருந்து விடமுடியாது என்பதை உணர்த்தியுள்ளது.

காரணம் இதேபோன்று 1977ஆம் ஆண்டு நடைபெற்ற ஆஷஸ் தொடருக்கு முன்பு நடைபெற்ற சமர்செட் அணியுடனான போட்டியிலும் அவுஸ்ரேலியா தோல் வியை சந்தித்ததுடன் ஆஷஸ் கிண்ணத்தையும் பறிகொடுத்தது.

1977ஆம் ஆண்டு மே மாதம் 18,19ஆம் திகதிகளில் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா முதல் இன்னிங்சில் 232 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது சமர்செட் அணி முதல் இனிங்சில் 340 ஓட்டங்களைப் பெற்றது. அவுஸ்திரேலியா இரண்டாவது இனிங்சில் 239 ஓட்டங்களுக்குள் சுருண்டது.இதன்மூலம் சமர்செட் அணியின் பந்துவீச்சு, களத்தடுப்பு என்பவற்றின் திறன் வெளியானது.

எனவே 113 என்ற வெற்றியிலக்கை சமர்செட் அணி மூன்று விக்கெட்டுக்களை மட்டும் இழந்து பெற்றுக்கொண்டது.அன்று அவுஸ்திரேலிய அணியில் கிரேக்சப்பல், டக்வோல்டர்ஸ்,றொட்னிமார்ஷ் போன்ற பிரபல வீரர்கள் பங்கேற்றனர். சப்பல் முதல் இனிங்சில் 113 ஓட்டங்களைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது. அதே போன்று சமர்செட் அணியில் இயன்பொத்தம்,ரோஸ் ஸ்லோ,கொம்ப் ஆகிய வீரர்கள் பங்கு பற்றினர். எனினும் அவ் வணிக்காக ஆடிய மேற்கிந்தியத் தீவுகள் வீரர் றிச்சடசன் துடுப்பாட்டத்தில் சிறந்து விளங்கினார்.

அதே போன்று கடந்த மே மாதம் நடைபெற்ற போட்டியில் சமர்செட் அணிக்காக ஆடிய சிறிலங்காவீரர் சனத் ஜெயசூரிய (101)தென்னாபிரிக்க வீரர் கிரஹம் ஸ்மித் (108) ஆகியோர் பெற்ற சதத்தினால் அவுஸ்ரேலிய அணி சமர்செட்டிடம் தோல்வியுற்றது. எனவே இவர்கள் பெற்ற சதங்களே ஆஷஸ் தோல்விக்கு காரணமாக இருக்குமோ? எனினும் இவர்கள் பெற்ற சதங்களை றிக்கி பொண்டிங் பொரிது படுத்தாமல் ஆடுகளத்தை குறை கூறியுள்ளார். அவுஸ்திரேலியாவின் தொடர்வெற்றிக்கு முற்றுப்புள்ளி வைத்த இங்கிலாந்து அணியைப் போன்றே அவுஸ்திரேலிய அணியும் மேற்கிந்திய தீவுகள் அணியின் தொடர் டெஸ்ட் வெற்றிக்கு முற்றுப்புள்ளி வைத்து தனது பயணத்தை நேற்றுவரை தொடர்ந்தது.இனி இங்கிலாந்தின் பயணம் தொடருமா? என்பதற்கு இவ்வருட இறுதியில் பதில் கிடைத்துவிடும்.

— வடிவேல்


**மரணபயம்...** ரத்தம் கொட்டும் பயங்கரம்... உயிரேபோய்விடும் அபாயம் இந்தக் குலை நடுங்கும் காட்சிகள் அத்தனையும் குத்துச் சண்டைக் கோதாவில் சர்வ சாதாரணமாக அரங்கேறும். எதிர்த்து போட்டியிட்டவர் விட்ட அசுர குத்தில் மட்டும் இதுவரை 900 வீரர்கள் மரணத்தை தழுவியிருக்கின்றனர். இந்தப் பட்டியல் இன்னும் தொடர்கிறது.

சமீபத்தில் காவின்லியா லெண்டா ஜான்சன் மரணமடைய குத்துச் சண்டைக்கு தடை கோரும் கோசம் வலுவடைந்துள்ளது.

உலகில் மரண விளையாட்டு என்றால் அது குத்துச் சண்டைதான்.கற்காலம் போன்று இன்னும் ஒருவரை ஒருவர் குத்திக் கொண்டு இரத்த வெள்ளத்தில் மிதப்பது வாடிக்கையாகிவிட்டது.

கடந்த வாரம் லாஸ்வேகாஸ்ஷில் நகரில் நடந்த லைட்-வெயிட் சம்பியன் பட்டத்துக்கான போட்டியில் அமெரிக்காவின் லீமா லெண்டர் ஜான்சன் மெக்சிக்கோவின் ஜீசட் விட்ட குத்தில் நிலை குலைந்து கீழே விழுந்தவர் சம்பியன் பட்டத்துடன் உயிரையும் துறந்தார்.

தலையில் தாக்கியதால் மூளை சிறுநீரகம் பாதிக்கப்பட்டு பரிதாபமாக மரணத்தை தழுவினார்.




## விளையாட்டு வேதனையில் முடிவதா?

இதையடுத்து உலகம் முழுவதும் குத்துச் சண்டைப் போட்டியை தடைசெய்ய வேண்டும் என்ற கோரிக்கை எழுந்துள்ளது. 1920 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை சுமார் 900 வீரர்கள் மரணமடைந்துள்ளனராம்.

இதைத் தடுத்து நிறுத்த தடை விதிக்க வேண்டும் அல்லது பாதுகாப்பான முறையில் வீரர்கள் மோத வேண்டும் என்கின்றனர் நிபுணர்கள். மரணம் ஏற்படும் என்று மோதுவது சரியல்ல. சம்பியன் பட்டம் கைப்பற்றும் வீரர்களுக்குக் கூட ஏதாவது ஒரு விதத்தில் பாதிப்பு ஏற்படுகிறது.

முன்னாள் வீரர்களில் 15 முதல் 40 சதவீதம் பேர் மூளை பாதிப்பினால் அவதிப்படுவதாக நரம்பியல் நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

குத்துச்சண்டை வீரர்களோ தாங்கள் வீரத்தை வெளிப்படுத்துகின்றோம். கடைசிவரை குத்து வாங்கி மரணமடைகின்றோம் என வீண்வீரப்பு பேசுகின்றனர்.

தடை செய்யாவிட்டாலும் கூட குறைந்த பட்சம் பாதுகாப்பாக மோத ஏற்பாடு செய்யவேண்டும். ஒலிம்பிக் போட்டிகளில் நடாத்தப்படுவது போன்று பிரத்தியேக தலைக்கவசம், கையில் பெரியளவிலான கையுறை முரட்டுத்தனமாக தாக்கினால் புள்ளிகள் குறைப்பது போன்ற கட்டுப்பாடுகளை கொண்டு வரவேண்டும் அப்போது தான் மரணப்பிடியிலிருந்து வீரர்களை காப்பாற்ற முடியும்.

## சமரசமா? பதுங்கிப் பாயும் பிரச்சினையா?






**அமெரிக்காவுக்கு** கற்றினா, றீற்றா சூறாவளி போல் இந்திய கிரிக்கெட் வட்டாரத்தை இரண்டு வாரங்களாக ஆட்டுவித்த கங்குலி- சப்பல் சர்ச்சை ஒரு வழியாக முடிவுக்கு வந்துள்ளது.

இது சூழ்நிலை சமரசமா? அல்லது பதுங்கிப் பாயும் பிரச்சினையா? என்பது இனி மேல் தான் தெரியவரும். நடந்து கொண்டிருக்கும் பிரச்சினையை பார்க்கும் போது ஆரோக்கியமான பாதையில் இந்திய கிரிக்கெட் செல்லவில்லை என்று தான் தோன்றுகின்றது.

சிம்பாப்வே சுற்றுப்பயணத்தின் போது கங்குலி-சப்பல் இடையேயான உரையாடல்கள் அனைவரும் அறிந்த ஒன்றுதான். கங்குலியை அணித்தலைவர் பதவியிலிருந்து விலகுமாறு சப்பல் நிர்பந்தித்தார் என்ற செய்திகள் பரவலாக வெளியாகின. இதைவிட கங்குலி பற்றி சப்பல் அனுப்பிய ஈ-மெயில் காற்றில் பரவ விடயம் பூதாகாரமாக வெடித்தது முடிவில் இருவரையும் இந்திய கிரிக்கெட் சபை அழைத்துப் பேசி கங்குலியை குற்றமற்றவர் நேர்மையானவர் என்று பட்டம் கொடுத்து பிரச்சினையை முடித்து வைத்து விட்டது.

சர்வதேச அந்தஸ்து பெற்ற கிரிக்கெட் அணிகளைப் பொறுத்தவரை எந்தப் பயிற்சியாளரும் அணித்தலைவரை நீக்கவேண்டும் என்று கோரியதில்லை. இப்படி இருக்கும் போது ஏன் இந்தப் பிரச்சினை என்கிறீர்களா?

சப்பல் இந்திய அணிக்கு பயிற்சியாளராக பொறுப்பேற்ற போது ஒரு விடயத்தை வலியுறுத்தினார்.அதாவது அணியில் 15 சிறந்த வீரர்கள் தெரிவு செய்யப்படவேண்டும். அதிலிருந்து திறமையான ஒருவரை அணித்தலைவராக நியமிக்க வேண்டும் என்றார். அணித்தலைவருக்கு களத்தில் களத்தடுப்பு அமைப்பது மட்டும் வேலையலல. அவர் அணிக்கு உபயோகமாக இருக்க வேண்டும் என்பது சப்பலின் கருத்து

கங்குலியை பொறுத்து இதில் தலைவராக திறன்பட செயற்பட்டுள்ளார். இதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை. அதே நேரத்தில் வெற்றிச்சாதனையை மனதில் கொண்டே அணியில் நீடிப்பது மிகப்பெரிய தவறு'

முன்னர் சிறப்பாக ஆடிய கங்குலி இப்போது பந்துகளை சமாளிக்கவே திணறிவருகிறார். பவுன்சர் பந்துகளை'சமாளிக்கத் தெரியவில்லை, போதிய உடல் தகுதியும் இவருக்கு இல்லை. இதை எல்லாம் கவனித்து தான் சப்பல் இப்படி ஒரு முடிவு எடுத்திருக்கக்கூடும் என் கின்றனர் கிரிக்கெட் விமர்சகர்கள்.

அவுஸ்திரேலியாவுக்குரிய ஆளுமை திறனோடு தான் சப்பல் இப்படி பேசுகின்றார் என்றாலும் தலைவரை வேண்டாம் என்று சொல்லுமளவுக்கு அது போக வேண்டுமா? என்றும் கூறுகிறது ஒரு தரப்பு.

ரசிகர்களை பொறுத்து ஒரு விடயத்தில் உறுதியாக உள்ளனர். சப்பலின் குற்றச்சாட்டில் நியாயம் இருப்பதாகவே உணர்கின்றனர். ரசிகர்களின் கருத்துக்கு மதிப்பளிக்காது டால்மியா போன்றவர்கள் கங்குலிக்கு மீண்டும் ஆதரவு தெரிவிப்பதில் அர்த்தமில்லை.ஒன்று அவர் அணியில் ஒரு வீரராக சிறப்பாக செயற்பட வேண்டும். அல்லது அணியைவிட்டே நீக்கப்பட வேண்டும். இந்த நடைமுறை எந்த அணித் தலைவருக்கும் பொதுவான ஒன்றுதான் அப்போது தான் அணி ஆரோக்கியமான வளர்ச்சி பெறும் .

18 ஆண்டுகளின் பின் ஒரு வலிமை மிக்க தொடரில் இங்கிலாந்து அணி சாதிக்கின்றது என்றால் அதற்கு அணித் தலைவர் மற்றும் வீரர்களின் அர்ப்பணிப்பு உணர்வே முக்கிய காரணம். இதை சம்பந்தப்பட்டவர்கள் உணரவில்லையென்றால் நூறு சப்பல்கள் வந்தாலும் இந்திய அணியை வளர்ச்சிப் பாதைக்கு கொண்டு செல்லமுடியாது.

— இ. சியான்

# மேல் கொத்மலைக்கு எதிரான ஆர்ப்பாட்டம்

# மகிந்த ஆதரவுக் குழுவினால் குழப்பியடிப்பு

(கொழும்பு)

**மேல் கொத்மலைத் திட்டத் திற்கு எதிரான மக்கள் இயக்கம் நேற்று முன்தினம் தலவாக்கலையில் ஏற்பாடு செய்திருந்த ஆர்ப்பாட்டம் இளைஞர் குழு ஒன்றினால் குழப்பப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. தலவாக்கலை சிறிகதிரேசன் கோயிலுக்கு அருகில் ஆரம்பமான இந்த ஆர்ப்பாட்டத்தை சுமார் 50 இளைஞர்களை கொண்ட குழு குழப்பிய தாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

மேல் கொத்மலை திட்டத்திற்கு எதிரான இயக்கத்தின் சார்பாக இளைஞர்கள் குழு அமைதியாக ஊர்வலம் நடத்தியவேளையில் இந்த இளைஞர்கள் ஊர்வலத்தில் சென்றவர்களின் பதாகைகளை கிழித்தெறிந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக கருத்துரைத்த மேல் கொத்மலை திட்டத்திற்கு எதிரான அமைப்பின் தேசிய அமைப்பாளர் டி. தம்பையா, சனாதிபதி வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷவின் ஆதர வாளர்களால் தலவாக்கலை நகரில் அமைக்கப்பட்டுள்ள அலுவலகத்தில் இருந்து வந்தோரே தமது ஆர்ப் பாட்டக் குழுவினர் மீது தாக்குதல் நடத்தியதாகத் தெரிவித்தார். (32)

-சுனாமியால் பாதிப்புற்றுள்ள-

# அம்பாந்தோட்டை மாவட்டத்திற்கு ஜப்பான் 64 ஆயிரம் டொலர் உதவி

(கொழும்பு)

கடல்கோள் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட அம்பாந்தோட்டை மக்களின் வாழ்க்கைத் தரத்தை கட்டியெழுப்புவதற்கு ஜப்பான் அரசாங்கம் 64ஆயிரம் அமெரிக்க டொலர் நிதியுதவி வழங்கியுள்ளது. கடல்கோள் அனர்த்தத்தால் அம்பாந் தோட்டை மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட ஆயிரத்து நூறு குடும்பங்களின் வாழ்க்கைத்தரத்தை கட்டியெழுப்ப இந்த நிதியுதவி பயன்படுத்தப்படுமென ஜப்பானியத் தூதரகம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஜப்பானிலுள்ள அரசசார்பற்ற நிறுவனங்கள் வழங்கிய நிதியுதவியும் இதில் இணைக்கப்பட்டிருப்பதாகவும், இந்த நிதியுதவி அம்பாந்தோட்டையில் பாதிக்கப்பட்ட இளைஞர்களுக்கான தொழில்நுட்ப பயிற்சிகள், பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கான உளவள நிகழ்ச்சித் திட்டங்களை முன்னெடுப்பதற்கு பயன்படுத்தப்படுமெனவும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. கடல்கோள் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட இலங்கை மக்களின் நன்மைகருதி 80மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவி ஏற்கனவே வழங்கப்பட்டிருப்பதாகவும் ஜப்பானியத் தூதரகம் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை மறு பரிசீலனை செய்க!

*–நோர்வேயிடம் மு. ச செயலகம் கோரல்*

(கொழும்பு)

யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை மறுபரிசீலனை செய்ய நோர்வே அனுசரணையாளர்களுக்கு முஸ்லிம் சமாதான செயலகம் வேண்டுகோள் விடுத்துள்ளது, முஸ்லிம் சமாதான செயலகத்தின் செயலாளர் ஜாவித் யூசுப், நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிறஸ்கருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தற்போதைய யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் முஸ்லிம்களும் பங்கேற்பு செய்யும் வகையில் அது திருத்தப்பட வேண்டும் என்று கோரியுள் ளார். யுத்த நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத் திடப்பட்ட பின்னைய நிலைமை களைக் கருத்தில் கொண்டே இக் கோரிக்கை முன்வைக்கப் படுவதாகவும் அக்கடிதத்தில் ஜாவித் யூசுப் தெரிவித்துள்ளார். நோர்வேத் தரப்பினர் இக்கோரிக்கைக்கு இதுவரை பதிலேதும் தெரிவிக்க வில்லை. சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் பேரியல் அஷ்ரப்பின் தேசிய ஐக்கிய கூட்டணி ஆகிய இரு கட்சிகளும் முஸ்லிம் களின் நலன்களைக் கருத்தில் கொண்டு ஏற்படுத்திக் கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தையடுத்து இந்த முஸ்லிம் அமைதிச் செயலகம் உருவாக்கப்பட்டுள்ளது. இதன் செயலாளராக உள்ள ஜாவித் யூசுப், சிறிலங்காவுக்கான சவூதி அரேபிய தூதுவராகப் பணியாற்றியவர்.

# சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதியின் செய்மதிப்படம் சிறிலங்கா அரசிடம்

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட இலங் கைத்தீவின் நுட்பமான செய்மதி வரைபடத்தை ஐரோப்பிய ஒன்றியமும் இந்தியாவும் தம்வசம் வைத் திருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளன.சிறிலங்கா மற்றும் தமிழீழத்தில் ஆழிப்பேர லையால் பாதிக்கப்பட்டிருக்கும் பகுதிகளை அச்செய்மதிப் படம் துல்லியமாக விவரித்துள்ள தாகவும் கூறப்படுகிறது.

இதே போன்ற ஒரு செய்மதிப்படம் சிறிலங்கா வெளிவிவகார அமைச்சராக இருந்த லக்ஷ்மன் கதிர்காமர் கொல்லப்பட்ட சில மாதங்களுக்கு முன்பாக அவரிடமும் கையளிக்கப் பட்டிருக்கிறது.இந்தப்படங்கள் மூலம் ஆழிப்பேரலை மீளமைப்புப் பணிகளை மேற்கொள்வதற்கான செயற்திட்டங்களை எளிதில் வகுக்க முடியும் என்று செய்திகள் தெரிவித்தாலும் தமிழீழ கடற்படைக்கு ஏற்பட்டிருக்கும் சேதங்களை சிறிலங்கா அரசாங்கம் இப்படம் மூலம் அறிந்து கொள்ளப் போவதாகவும் கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.ஆழிப்பேரலை மீளமைப்புக்கான தொழில்நுட்ப உதவித்திட்டத்தின் கீழ் சிறிலங் காவின் தேசிய நகர்ப்புற அபிவிருத்திச் சபைக்கு இந்தத் தகவல் கையளிக்கப்படவுள்ளதாக ஐரோப்பிய ஆணையத்தின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.இதே போன்ற ஒரு செய்மதிப் படத்தை இந்தோனேஷியாவிடமும் ஐரோப்பிய ஆணையம் வழங்கியிருக்கிறது என்றும் கூறப்படுகிறது.


## மு/வித்தியானந்தாக் கல்லூரி

**பாடசாலை அபிவிருத்திச் சங்கம் 2005**
**வருடாந்த பொதுக்கூட்டம்**

காலம்:- 12-10-2005(புதன்)பி.ப3.00மணி

இடம்:- ஞானப்பிரகாசர் மண்டபம்

அனைத்துப் பெற்றோர்களையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

கூட்டம் ஆரம்பிப்பதற்கு முன் உங்கள் அங்கத்துவப் பணத்தைச் செலுத்தி பற்றுச் சீட்டைப் பெற்றுக் கொள்ளவும்.

(6619) செயலாளர்,பா.அ.சங்கம்


# யாருக்கு ஆதரவளிப்பது என்பதில் இ.தொ.காங்கிரசிற்குள் முரண்பாடு!

*-மு.கா வும் மகிந்தவுக்கு நிபந்தனை*

(கொழும்பு)

எதிர்வரும் சனாதிபதித் தேர்தலில் இலங்கை தொழிலாளர் காங்கிரசில் அதிகமானவர்கள் ரணிலை ஆதரிப்பதாகவும் ஒரு சிலர் மகிந்த ராஜபக்ஷவை ஆதரிக்கப் போவதாகவும் கூறியுள்ளனர். இதனால் இலங்கை தொழிலாளர் காங்கிரசிற்குள் கருத்து வேறுபாடுகள் அதிகரித்துள்ளதாகவும் இ.தொ.கவில் பிளவு ஏற்படும் நிலை தோன்றியுள்ளதெனவும் செய்திகள் வெளிவந்துள்ளன.

அதேநேரத்தில் முஸ்லிம் காங்கிரஸ் ரணில் விக்கிரமசிங்காவுக்கு ஆதரவளிப்பதற்கு விருப்பம் தெரிவித்துள்ளது. ஜே.வி.பியினரை தமது கட்சி ஆதரிக்கவில்லை என்றும் தன்மானமுள்ள முஸ்லிம்கள் எவரும் ஜே.வி.பியுடன் இணைந்து செயற்பட மாட்டார்கள் என்றும் அநேக முஸ்லிம் மக்கள் தெரிவித்துள்ளனர். தாம் செய்த தவறுகளுக்கு பொது மக்கள் முன்னிலையில் ஜே.வி.பி மன்னிப்புக் கோர வேண்டும் எனவும் இது சம்பந்தமாக பிரதமர் மகிந்த ராஜபக்ஷ பொது மன்னிப்புக் கோரினால் முஸ்லிம் காங்கிரஸ் தமது தீர்மானத்தை மீள் பரிசீலனை செய்வதற்கு முயற்சி செய்யும் என முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப்ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

# ஐரோப்பிய ஒன்றியத் தடை பேச்சுக்களைப் பாதிக்காது

*நோர்வே தூதரகப் பேச்சாளர் கூறுகிறார்*

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு எதிராக ஐரோப்பிய ஒன்றியத்தினால் விதிக்கப்பட்ட பிரயாணத் தடை இனப்பிரச்சினை தொடர்பான சமாதானப் பேச்சுவார்த்தைகளைத் தொடர்வதற்கு குந்தகமாக அமையாது என சிறிலங்காவுக்கான நோர்வே தூதுவராலயத்தின் பேச்சாளர் தெரிவித்துள்ளார். ஐரோப்பிய ஒன்றியத்தில் நோர்வே அங்கத்துவ நாடு அல்லவென தெரிவித்த பேச்சாளர் கேஸ்ரி ரொம்ஸ்டல், தமிழீழ விடுதலைப்புலிகளுக் கெதிரான பிரயாணத் தடைக்கும் தமது நாட்டிற்கும் தொடர்பெதுவும் இல்லையெனத் தெரிவித்தார். இந்த அடிப்படையில் தமது பணி வழமைபோல இடம்பெறும் எனவும் தெரிவித்தார். அதேவேளை, யுத்த நிறுத்த ஒப்பந்தம் தொடர்பாக அரசாங்கத் துடனும், தமிழீழ விடுதலைப் புலிகளு டனும் பேச்சுவார்த்தைகளை நடத்த யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு வின் தலைவர் ரொண்ட்புறுவ் ஹொவ்டே திட்டமிட்டபடி இந்த மாத நடுப்பகுதியில் இலங்கைவருவார் என தகவல்கள் தெரிவிக்கின்றன. (32)

# லொக்குபண்டார நீக்கம்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் ஒருங்கிணைப் பாளர் பதவியிலிருந்து லொக்குபண்டார நீக்கப்படவுள்ளார்.

எதிர்வரும் சனாதிபதித் தேர் தலில் கட்சியின் வேட்பாளர் ரணில் விக்கிரமசிங் கவை ஆதரித்துப் பிரச்சாரம் மேற்கொள்ள மறுத்ததை யடுத்தே இந்த நடவடிக் கையை மேற்கொள்ள ரணில் முடிவு செய்துள்ள தாகத் தெரிகிறது.

பதுளை மாவட்டம் ஹப்புத் தளை ஐக்கிய தேசியக் கட்சியின் ஒருங்கிணைப்பாளராக லொக்கு பண்டார உள்ளார். லொக்கு பண்டாரவை நீக்கிவிட்டு வின்னி டயஸ் அல்லது திடுல பொக்குபர அப்பதவியில் நியமிக்கப்படக் கூடும் என்று ஐ.தே.க வட்டாரங்கள் கூறுகின்றன.


Danish Demining Group

## VACANCY NOTICE

Post Title: Administrative Assistant
Duty Station: Jaffna

**Major Duties and Responsibilities:**

* Answering phone calls
* Covering the Demining Operations
  Maintain the log sheets
  Maintain the Accident reports
* Collection, analysis and presentation of information for all operational areas. (Mine field)
* Handling the files.
* Updating Human resources database.
* Perform any other duties as required.

**Educational Background:**

* Bachelor's Degree or Secondary Education with a credit or distinction passes in English.
* Experience in the use of computer applications, and be able to type Tamil and English.
  Should be able to work independently.
* Ability to work in an international environment.

**Language Requirements:**
Excellent command of English, the working language of the duty station, both oral and written.

**How to apply:**
Duly filled Applications should be sent under registered cover to reach the Administrator, Danish Demming Group, 18\10, Wyman Road, Jaffna,

**Closing Date:** Monday 15th October 2005.
Women are encouraged to apply.

(சி-12894)



நமது செய்தி
Namathu Seithi

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களின் குரலாக வருகிறது - " நமது செய்தி"

அந்தரங்கத்தில் நடக்கும் சுனாமி நிதி மோசடிகளை அம்பலப்படுத்துவோம்.

**Desirable:**

- Experience in working with partners.
- Bi-lingual (Tamil, English)

**Save the Children in Sri Lanka is an equal opportunity employer and does not discriminate with respect to gender, religion, ethnicity or caste.**

Please note that all positions are subject to transfer and that the age limit at SCiSL is 60 years.

The position applied for should be indicated on the top of your application and on the top left hand corner of the envelope. Applications should be sent with the names of two non related referees on or before **07th October 2005** to:

**Save the Children in Sri Lanka**
**142, Kandy Road , Kilinochchi Regional Office**
**Only applicants selected for the interview will be contacted.**
**No telephone inquiries please.**

Save the Children in Sri Lanka [SCiSL] is part of the world's largest independent movement for children working in over 100 countries. SCiSL is a non religious, non political, independent international organization working for the protection and the full realization of child rights. Our work in Sri Lanka focuses on **Education, Children Affected by Armed Conflict/Disaster** and **Social Harmony** and **Peace**. Our projects, both self implemented and in partnership with local organizations are carried out in over 18 locations throughout the country.

(சி-12944)

**Job Advertisement**

**Save the Children**
in Sri Lanka

Save the Children in Sri Lanka (SCiSL) is an International Non Governmental Organization working for the rights and well-being of children, irrespective of nationality, race or religion. Together with children, we are helping to build a better world for present and future generations.

Vacancy exists for the following position.

**JOB TITLE :DRIVER (Casual Base)Emergency Response programme**
**LOCATION: Kilinochchi**

**JOB PURPOSE**

To drive SC's vehicles and transport goods and persons safely to their destination as per SC's requirements, and be responsible for the maintenance of our vehicles.

**LINE MANAGEMENT**

The Drivers will be Line managed by the Logistics personnel in the district office. Drivers in the Programme Offices will be supervised by the Regional Administrative Assistant.

**MAIN RESPONSIBILITIES WILL INCLUDE:**

a. Drive / Ride SC's vehicles (including Lorry) as per requirements, and ensure that all goods documents and personnel in the vehicle reach their destination safely.

b. Carry out routine maintenance and repair of SC's vehicles and promptly report to the Transport Officer, all repairs that need to be effected and ensure that SC's vehicles are in good running condition at all times.

c. Prior to the commencement of the journey, check and ensure that vehicle is in a good running condition and that all the necessary tool kits, first aid kits, fire extinguisher and other safety equipment are in place.

d. Undertake the delivery of letters and posting of letters as and when requested by the Regional Administrative Officer (in the regional offices) and the Regional Administrative Assistants in the Programme Offices.

e. Accurately maintain the running charts, and other vehicle documentation and ensure that all vehicle usage is appropriately authorised and documented.

f Ensure that the vehicles assigned to you are washed & cleaned regularly and the air pressure, battery water etc are checked regularly.

g In the event of an accident ensure that the proper procedures and precautions are taken care of and SC's interests are protected, and any injured personnel are taken care of. This includes obtaining the necessary documentation, police reports for insurance and record purposes.

h. Any other relevant tasks designated by the Management from time to time.

**PERSON SPECIFICATION**

**ESSENTIAL REQUIREMENTS**

1. Possess a valid national driving and riding licence for Motor Coach and motor bikes (category 'A'& 'D').
2. Willingness to make purchases, and assist in 'supplies' activities.
3. 5 years accident free riding & driving experience.
4. Ability and willingness to carry out basic repairs and maintenance to the vehicles.
5. Thorough knowledge of the road network in Sri Lanka, and willing to travel to all parts of the island.
6. G.C.E Ordinary Level.
7. Fluency in Sinhala or Tamil and ability to read and write in English.

**DESIRABLE**

1. Knowledge of a third national language.
2 Licence to ride three wheelers (category E & D)

**Save the Children in Sri Lanka is an equal opportunity employer and does not discriminate with respect to gender, religion, ethnicity or caste.**

Please note that all positions are subject to transfer and that the age limit at SCiSL is 60 years.

The position applied for should be indicated on the top of your application and on the top left hand corner of the envelope. Applications should be sent with the names of two non related referees on or before **10 October 2005** to:

**Save the Children in Sri Lanka**
**142, Kandy Road , Kilinochchi Regional Office**
**Only applicants selected for the interview will be contacted.**
**No telephone inquiries please.**

Save the Children in Sri Lanka [SCiSL] is part of the world's largest independent movement for children working in over 100 countries. SCiSL is a non religious, non political, independent international organization working for the protection and the full realization of child rights. Our work in Sri Lanka focuses on **Education, Children Affected by Armed Conflict/Disaster** and **Social Harmony** and **Peace**. Our projects, both self implemented and in partnership with local organizations are carried out in over 18 locations throughout the country.

(சி-12944)

# இளையோர் செயற்பாட்டு நிறுவனத்தின் அரும்புகள் கால்பந்து இறுதிப்போட்டி இன்று

இளையோர் செயற்பாட்டு நிறுவனத்தின் அரும்புகள் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் 13, 15 வயதுப் பிரிவுகளின் இறுதிப் போட்டி இன்று பி.ப. 2.30 மணிக்கு மருதநகர் சந்திரன் விளையாட்டரங்கில் இடம்பெறவுள்ளது. 15 வயதுப் பிரிவில் காந்தரூபன் அறிவுச்சோலை அணிக்கும் வட்டக்கச்சி ம.வி. அணிக்கும் இடையிலான போட்டியும், 13 வயதுப் பிரிவில் காந்தரூபன் அறிவுச்சோலை அணிக்கும், உருத்திரபுரம் ம.வி. அணிக்கும் இடையே இறுதிப் போட்டியும் இடம்பெறவுள்ளது.

நேற்றுக் காலை வைபவ ரீதியாக நடைபெற்ற தொடக்க விழாவில் தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு தேசியக் கொடியினை ஏற்றிவைத்தார். இளையோர் செயற்பாட்டு நிறுவனச் செயலாளர் அன்ரன் அன்பழகன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வின் விழாச் சுடரினை தமிழீழ அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ. தங்கன் ஏற்றிவைத்தார். போட்டியில் பங்குபற்றிய அனைத்து சிறுவர்களையும் அரசியல்துறைப் பொறுப்பாளர் கைலாகு கொடுத்து உற்சாகப்படுத்தினார். இந்நிகழ்வில் அரசியல்துறை மக்கள் தொடர்பகப் பொறுப்பாளர் தியாகராஜா, விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் கி. பாப்பா ஆகியோரும் கலந்து கொண்டனர்.



## இறுதிப் போட்டி அணிகள்









## உலக சம்பியன் செஸ் போட்டி மூன்றாவது சுற்றில் ஆனந்த் தோல்வி



உலக சம்பியன்ஷிப் செஸ்போட்டியில் இந்திய வீரர் ஆனந்த் தோல்வியடைந்துள்ளார்.


ஆர்ஜென்டினாவில் உள்ள சான்லூயிஸ் நகரில் உலக சம்பியன்ஷிப் செஸ் போட்டி நடந்துவருகிறது. இந்தியவீரர் விஸ்வநாதன் ஆனந்த் இந்தப் போட்டியில் கலந்துகொண்டு ஆடிவருகிறார். நேற்று முன்தினம் முதன் முறையாக ஆனந்த் தோல்வியைத் தழுவினார்.

உக்ரைன் நாட்டு வீரர் ருஸ்தம் காசிம் மிட்சனோவுடன் மோதிய ஆனந்த் கறுப்பு காய்களுடன் ஆடினார். சிசிலியன் நஜ்டோர்ப் முறையில் இருவரும் ஆடினர். 38 ஆவது நகர்த்தலில் ஆனந்த் தோல்வியை தழுவினார். இதன்மூலம் மூன்றாவது இடத்துக்கு ஆனந்த் தள்ளப்பட்டுள்ளார். இதுவரை மூன்று ஆட்டங்களை சந்தித்த ஆனந்த் ஒரு வெற்றி ஒரு சமநிலை ஒரு தோல்வியை சந்தித்திருக்கிறார்.

## திருத்தம்

ஆனைவிழுந்தான் பைந்தமிழ் விளையாட்டுக்கழகம் நடாத்திய மென்பந்துப் போட்டியில் நியூஸ்ரார் அணியிடம் சோலை அணி தோல்வியடைந்தது என்பதற்குப் பதிலாக நேற்றைய விளையாட்டுச்செய்தியில் தோழர்கள் அணி தோல்வி என தவறுதலாக இடம் பெற்றமைக்கு மனம் வருந்துகிறோம்.




சியோலில் நடந்த கொரிய ஓபன் டென்னிஸ் இறுதிப் போட்டியில், செக் குடியரசை சேர்ந்த நிகோலே வைடிசோவா 7-5, 6-3 என்ற நேர் செற்களில் சேர்பியாவை சேர்ந்த ஜெலினா ஜன்கோவிக்கை வீழ்த்தி பெற்ற சம்பியன் கோப்பையை முத்தமிட்டு மகிழ்கிறார் வைடி சோவா.

# ஆனைவிழுந்தான் மாவீரர் நினைவு மெ.ப. இறுதிப்போட்டி; கிருஷ்ணபாரதி விளையாட்டுக்கழகம் சம்பியன்







ஆனைவிழுந்தான் பிரதேச மாவீரர் நினைவாக ஆனைவிழுந்தான் பைந்தமிழ் விளையாட்டுக் கழகம் நடாத்திய மென்பந்து துடுப்பாட்ட போட்டி நேற்று பரிசளிப்பு விழாவுடன் சிறப்புற நிறைவு பெற்றது. கடந்த நான்கு நாட்களாக மாவீரர் பிறேமா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற மேற்படி சுற்றுப் போட்டியில் நியூஸ்ரார் அணியை பத்து ஓட்டங்களால் தோற்கடித்து கிருஷ்ணபாரதி அணி சம்பியனானது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற கிருஷ்ணபாரதி அணி முதலில் துடுப்பாடுவதாக அறிவித்தது. அதன்படி அவ்வணி நிர்ணயிக்கப்பட்ட 15 ஓவர்களில் ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 70 ஓட்டங்களைப் பெற்றது.துடுப்பாட்டத்தில் துஸ்யந்தன் 26,சசிக்குமார் 13,றொகான் ஐந்து ஓட்டங்களை அதிக பட்சமாகப்பெற்றனர்.பந்து வீச்சில் றேகன், சுதன் தலா இரண்டு விக்கெட்டுக்களையும் மயூரன் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

71 ஓட்டங்களைப்பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய நியூஸ்ரார் 14.3ஓவரில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து அறுபது ஓட்டங்களை மாத்திரம் பெற்று பத்து ஓட்டங்களால் தோல்வியைத்தழுவியது. பந்து வீச்சில் பார்த்தீபன் மூன்று ஓவர் பந்துவீசி ஐந்து ஓட்டங்களைக்கொடுத்து நான்கு விக்கெட்டுக்களை கைப்பற்றி வெற்றிக்கு வழிவகுக்கும் இவருக்கு இணையாக பிரபுராஜ் மூன்று விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

துடுப்பாட்டத்தில் தாசன் பதின்மூன்று ஓட்டங்களையும், ராஜ் பத்து ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். போட்டியின் தொடர் நாயகனாக நியூஸ்ரார் வீரர் தாசனும் போட்டியின் சிறப்பாட்டக்காரராக கிருஷ்ணபாரதி அணியின் பார்த்தீபனும் தெரிவாகினர்.

முன்னதாக நடைபெற்ற முதலாவது அரை இறுதியில் தூயதமிழ் அணியை கிருஷ்ணபாரதி அணியும் இரண்டாவது அரையிறுதியில் ஸ்கந்தாஅணியை நியூஸ்ரார் அணியும் தோற்கடித்து இறுதிப்போட்டிக்குத் தெரிவாகின.

இறுதி நாளான நேற்று சிறப்பு விருந்தினராக தமிழீழ விளையாட்டுத்துறை இணைப்பாளர் இன்பன் கலந்து கொண்டு கருத்துரை வழங்கினார்.

அவர் தனது உரையில் தமிழீழத்தைப் பொறுத்தவரை அனைத்துக்கிராமங்களும் பாகுபாடின்றி கவனம் செலுத்தப்பட்டு வளப்படுத்தப்படும். அந்த வகையில் ஆனைவிழுந்தான் போன்ற பின்தங்கிய கிராமங்கள் கருத்தில் எடுக்கப்பட்டு வெகுவிரைவில் அனைத்துத் துறைகளிலும் வளப்படுத்தப்படும் எனத் தெரிவித்தார். இந்நிகழ்வில் அப்பகுதி கிராம மக்கள் மற்றும் ரசிகர்கள் உணர்வுடன் கலந்து கொண்டு போட்டியை கண்டு களித்தமை குறிப்பிடத்தக்கது.



## தாய்லாந்து ஓபன் டென்னிஸ் பெரடர் சம்பியனானார்


தாய்லாந்தில் நடைபெற்ற தாய்லாந்து ஓபன் டென்னிஸ் போட்டியில் சம்பியனானார் ரோஜர் பெரடர். இறுதிப்போட்டியில் சுவிற்சர்லாந்து வீரரும், உலகின் முதல் நிலை வீரருமான ரோஜர் பெரடர்-இங்கிலாந்தின் அனுபவமற்ற ஆண்டிமுர்ரே மோதினார்கள்.இதில் ரோஜர் பெடரர்-6-3, 7-5 எனும் நேர் செட்டில் வென்று சம்பியன் பட்டத்தை கைப்பற்றினார்.

பெரடர் இந்த ஆண்டு கைப்பற்றியுள்ள11ஆவது டைட்டில் இதுவாகும். இந்த ஆண்டில் அவர் வென்றுள்ள 77ஆவது ஆட்டம் இது என்பதும் குறிப்பிடத்தக்கது.2003 ஆம் ஆண்டு அவர் 78ஆட்டங்களில் வென்றுள்ளார்.அதைவிட இப்போது ஒன்று குறைவாக உள்ளார்.

நேற்று முன்தினம் போட்டியில் பெரடரிடம் தோற்றுபோன ஆர்டிமுர்ரேவுக்கு 18 வயதாகிறது.அவர் ஏ.டி.பி.இறுதி ஆட்டத்தில் பங்கேற்ற முதல் தடவை இது என்பது குறிப்பிடத்தக்கது. அவருடைய உலக தரவரிசை 80 ஆக இருக்கிறது.

பெரடர் தொடர்ந்த 31போட்டிகளில் இதையும் சேர்த்து வென்றுள்ளார்.1977ஆம் ஆண்டு கில்லர்மோ விலாஸ் 46 போட்டிகளில் தொடர்ந்து வென்றார். 1995 ஆம் ஆண்டு தாமஸ் மஸ்டர் 35 போட்டிகளில் தொடர் வெற்றிபெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

## சிந்தனைக்கு



கல்வி எனும் மூலாதார உரிமையைப் பறித்தெடுத்து, தமிழீழத்தின் கல்வித்துறையைச் சிதைத்துவிட, சிங்களப் பேரினவாதம் நீண்டகாலமாகவே முயன்று வருகிறது.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 04.10.2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com

# சிறி.இல் தேசிய மதமாகிறது பௌத்தம்? அமெரிக்க அமைப்புகள் கடும் கண்டனம்!

சிறிலங்காவின் தேசிய மதமாக பௌத்த மதத்தை நடைமுறைப் படுத்த மேற்கொள்ளப்படும் முயற்சிகளுக்கு அமெரிக்கா அமைப்புகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன.

சிறிலங்காவின் பாராளுமன்றத்தில் இதற்கான அரசியல் யாப்புத் திருத்த மசோதா இன்று தாக்கல் செய்யப்படவுள்ளது.

இப்புதிய சட்டம் குறித்து அமெரிக்காவின் அனைத்துலக மத சுதந்திரத்துக்கான அமைப்பு கடும் விசனத்தை வெளியிட்டுள்ளது.

இச்சட்டம் மூலம் இதர மத வழிபாட்டுச் சுதந்திரத்திலும் புத்தமதத்தைச் சேர்ந்தவர்கள் தலையிடுவதற்கான வாய்ப்பு அளிக்கப்படுகிறது என்றும் மத சுதந்திரம் தொடர்பான சர்வதேச நடைமுறைகளுக்கு இது முற்றிலுமே எதிரானது என்றும் அந்த அமைப்பு எச்சரித்துள்ளது.

மதமாற்றத் தடைச்சட்டத்தை சிறிலங்கா சனாதிபதித் தேர்தலுக்கு முன்பாக நிறைவேற்ற வேண்டும் என்று பேரினவாத பிக்குகளின் அமைப்பாகிய ஜாதிக ஹெல உறுமய வலியுறுத்தி வந்தது.

அமெரிக்காவின் தலையீட்டையடுத்து இந்த மதமாற்றத் தடைச் சட்டம் விலக்கிக்கொள்ளப்படும் என்று கூறப்பட்ட நிலையில் பௌத்த மதத்தை தேசிய மதமாக அறிவிக்கும் இந்த இரகசிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பௌத்த மதத்தை தேசிய மதமாக்கும் சட்ட திருத்தத்தை உருவாக்க பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை தேவை என்றும் பாராளுமன்றம் ஒப்புதல் அளிக்க வேண்டும் என்றும் சிறிலங்கா தலைமை நீதிமன்றம் 2004 ஆம் ஆண்டு டிசம்பரில் தனது தீர்ப்பில் தெரிவித்திருந்தது.

தற்போது மீண்டும் இத்தகைய முயற்சிகள் மேற்கொள்ளப்படுவது குறித்து அமெரிக்காவின் மற்றொரு அமைப்பான ஓபன் டோர்ஸ்-ன் தலைவர் கார் மொயிலெர் இன்று கூறுகையில்;

சிறிலங்கா பாராளுமன்றத்தில் இச்சட்டத் திருத்த மசோதா தாக்கல் செய்யப்படக்கூடும் என்றும் இச்சட்டத்தின் சில திருத்தங்கள் கிறிஸ்தவர்களின் செயற்பாடுகளுக்குத் தடை விதிக்கக் கூடும் என்றும் கூறினார்.

சிறிலங்கா அரசியல் யாப்பானது புத்த மதத்தை பாதுகாத்து பேணி வளர்க்க வேண்டும் என்று கூறுகிறது. ஆனால் புதிய அரசியல் யாப்பின் திருத்தமானது புத்தமதத்தை விரிவுபடுத்தும் நோக்கத்தைக் கொண்டது.

இப்புதிய சட்ட திருத்தம் மூலம் கிறிஸ்தவர்கள் நடத்துகிற ஞாயிறு பள்ளிகள், சிறார்களுக்கான நிகழ்ச்சிகள் ஆகியவை தடை செய்யப்படும் அச்சுறுத்தல் எழுந்துள்ளது என்றும் கார் மொயிலெர் கூறுகிறார்.

இச்சட்டமானது கடுமையான தண்டனைகளையும் கொண்டிருப்பதாகவும் கார்மெயிலர் சுட்டிக் காட்டினார்.

# பொறுப்பற்றவர்கள்!

வீதி ஒழுங்குகளைப் பேணுவதற்காக மட்டுமல்ல, வீதிப் புனரமைப்பின்போது அதனைப் பாதுகாப்பதற்கும் காவல்துறையினரைப் பயன்படுத்த வேண்டியதொரு நிலை ஏற்பட்டுள்ளதா? என்பதையே திருநகர் வீதியில் கடந்த வாரத்தில் நடந்த சம்பவம் ஒன்று வெளிப்படுத்துவதாய் உள்ளது.

திருத்த வேலைகள் இடம் பெற்றுவரும் கிளிநொச்சி-திருநகர் வீதியில் ஒரு வாகனச்சாரதியினது நடவடிக்கைகளே இக்கேள்விக்குக் காரணமாகியுள்ளது. இத்தகைய பொறுப்பற்றவர்கள் இன்னமும் இச்சமூகத்தில் உள்ளனரா? என்ற அளவிற்கு அச்சாரதியின் நடவடிக்கை இருந்துள்ளது. தற்பொழுது செப்பனிடப்பட்டுவரும் திருநகர் வீதியின் ஒரு பகுதியில் கடந்த வாரத்தில் இரண்டாம் தரம் தார் பூசும் வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருந்தது. (தற்பொழுதும் அது தொடர்கின்றது) இந்நிலையில் கடந்தவாரம் வெப்பம் மிக உயர்வாக இருந்த வேளையில் வீதியின் ஒரு பகுதியில் (சுமார் 25 மீற்றர் நீளம் வரையில் ) தார் பூசப்பட்டு- அதன் மீது மண்போடாது காய்வனவிற்காக தொழிலாளர்கள் காத்துக்கொண்டிருந்தனர்.

இவ்வேளையில் அப்பகுதிக்கு நான்கு சில்லு வாகனத்தில் (வான் ஒன்றில்) வந்த ஒருவர் தார் ஊற்றப்பட்டிருந்த பகுதியூடாக செல்லப்போவதாக அடம்பிடித்தார். ஆனால் ஊழியர்கள் அதனைத் தடுத்தபோதும் அவர் அதனைக் கேளாது தனது வாகனத்தை தார் பூசப்பட்ட பகுதிக்கு மேலாகவிட்டுச் சென்றார்.

இதன்விளைவு தார் பூசப்பட்டபகுதியில் வாகனத்தின் நான்கு சில்லுகளும் பதியப்பெற்றன. அத்தோடு அவ்வீதியில் உந்துருளியில் வந்த மற்றொருவரும் தார் ஊற்றப்பட்டபகுதிக்கு மேலாக தனது உந்துருளியை ஓட்டிச் சென்றார். அவரது வாகனத்தின் சக்கரங்களும் பதியப்பெற்றது.

இதன்விளைவானது புதிதாகப் பூசப்பட்ட தார் மட்டுமல்ல ஏற்கனவே ஊற்றப்பட்ட தாருடன் புதியதாரும் ஒட்டியதால் பழைய தாரும், பழையதாருடன் ஒட்டியிருந்த தாருக்குக்கீழ் போடப்பட்டிருந்த கிரவல் மண்ணும் அள்ளுண்டன. இதன் காரணமாக புதிய தாரூற்றிய பகுதியில் வீதியில் வாகனத்தின் சக்கரங்களின் தடங்கள் பதிந்ததோடு தாருடன் சேர்த்து கிரவலும் அள்ளப்பட்டு வீதியில் கிடங்குகள் ஏற்பட்டன.

இதன் காரணமாக உச்சி வெய்யிலில் வேலை செய்து கொண்டிருந்த தொழிலாளர்கள் பூசப்பட்ட தார்மீது மண்பரவக் கூடியநிலை வந்த போதும் அதனைப் போட்டு மூடமுடியாத நிலையில் இருந்தனர். இதன்பின்னர் தார் எடுத்துவரப்பட்டு பின்னர் ஊற்றப்பட்டு அதன் பின்னரே மண் போடப்பட்டது. அதாவது ஒரு புறத்தில் வீதி சேதத்திற்கு உள்ளதோடு திருத்தவேலையில் ஈடுபட்டிருந்த ஊழியர்களுக்கும் மேலதிக வேலையை அது கொடுப்பதாகவே இருந்தது.

ஆனால் இத்தனைக்கும் அவ்வீதியில் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படுவதன் காரணமாக வீதி முடப்பட்டுள்ளது என்ற அறிவிப்பு வைக்கப்பட்டிருந்ததோடு வீதித்தடையும் ஏற்படுத்தப் பட்டிருந்தது. ஆனால் வாகனத்தில் வந்த சாரதி இதனைப் பொருட்படுத்தியதாக இல்லை. தடையையும் தாண்டியே இப் பகுதிக்கு வந்திருந்தார்.

இதன் பின்னர் வீதிப்புனரமைப்பு வேலையில் ஈடுபட்டிருந்தவர்கள் எவ்வளவோ கூறியும் அதனைப் பொருட்படுத்தவில்லை. தார் பூசப்பட்ட பகுதிக்கு மேலால் வாகனத்தை ஓட்டிச்சென்று வீதிக்குச் சேதத்தை ஏற்படுத்தினர்.

இச்சாரதியின் இச்செயலைப் பொறுப்பற்ற செயல் எனக் கூறுவது எந்தவகையிலும் தவறாக மாட்டாது. அவரிடம் எந்தவித சமூகசிந்தனையும் இருக்கவில்லை என்பதும் வெளிப்படையானது. அவ்வாறு இருந்திருக்குமேயானால் இத்தகையதொரு செயலை அவர் செய்திருக்க முடியாது.

இவ்வீதியானது கிளிநொச்சியில் சனநடமாட்டம் மிக்கதொரு வீதியாகும். ஆயினும் இவ்வீதியின் திருத்த வேலைகள் ஆரம்பிக்கப்படுவதற்குப் புரிந்துணர்வு உடன்பாடு ஏற்பட்டு சுமார் மூன்றரை ஆண்டு காலங்கள் காத்திருக்கவேண்டியதாக இருந்தது. அதிலும் கூட இவ்வீதி பூரணமாகவும் திருத்தி அமைக்கப் படவில்லை. ஏ-9 வீதியில் இருந்து சுமார் இரண்டு கிலோ மீற்றர் தொலைவிற்கே இத் திருத்த வேலைகள் இடம் பெற்றுவருகின்றன.

அதிலும் முன்னர் கற்கள் போடப்பட்டு தாரூற்றப்பட்ட வீதியாக இருந்த இவ்வீதியானது தற்பொழுது கிரவல் பரவப்பட்டு அதற்கு மேலாக தார் பூசப்படும் வகையில்- அதாவது முன்னரை விடக் குறைந்த தரத்திலேயே செப்பனிடப்பட்டு வருகின்றது. இத்தகையதொரு நிலையில் அவ்வீதியை எந்தவித அடிப்படையும் இல்லாது பொறுப்பற்றதனத்துடன் சேதமாக்க முற்படுவதை எவ்வாறு ஏற்றுக்கொள்ளமுடியும்? இதனைச் சமூக சிந்தனையற்ற செயல் எனக் கூறுவதில் தவறு என்ன இருக்க முடியும்?

## மேலதிக சொத்துச் சேர்த்த வழக்கிற்கு ரத்வத்த நேற்று ஆஜராகவில்லை

### - பாதுகாப்பு அச்சுறுத்தல் காரணமாம்

நான்கு கோடி மேலதிகமாக சட்டவிரோத சொத்துக்களை சேர்த்தார் என்ற குற்றச்சாட்டுக்கு உள்ளாகியுள்ள முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அநுருத்த ரத்வத்த நேற்று கொழும்பு மேல்நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை.

பாதுகாப்பு அச்சுறுத்தலை காரணம் காட்டியே அவர் மன்றில் ஆஜராகவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. இந்த நிலையில் வழக்கு பிறிதொரு தினத்திற்கு ஒத்திவைக்கப்பட்டது. 1997 மார்ச் மாதத்திற்கும் 2001 ஓகஸ்ட் மாதத்திற்குமிடையில் அநுருத்தரத்வத்த அதிக சொத்தை சேர்த்தார் என்ற அடிப்படையில் மன்றில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.(32)

## பரப்புரை சுவரொட்டிகளை 6ஆம் திகதிக்குள் அகற்றுக!

### -தேர்தல் ஆணையாளர் பணிப்பு

சிறிலங்கா சனாதிபதித் தேர்தல் பிரச்சார சுவரொட்டிகள்,பதாதைகள் கட்அவுட்களை 6ஆம்திகதி நள்ளிரவுடன் அப்புறப்படுத்த வேண்டும் என்று தேர்தல் திணைக்களம் பணித்துள்ளது.

இந்த உத்தரவுக்கு ஏற்ப ஆறாம் திகதிக்குள் இவற்றை அப்புறப் படுத்தாத கட்சி அமைப்பாளர்கள், தொகுதி அமைப்பாளர்கள் மற்றும் கட்சி ஆதரவாளர்களை கட்சி பேதமின்றி கைது செய்யப்படவுள்ளனர்.

இவர்களைக் கைது செய்து நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துமாறு தேர்தலுக்கான பொலிசார் அனைத்து பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரிகளுக்கும் அறிக்கை அனுப்பியுள்ளனர்.

இந்த உத்தரவைச் செயற்படுத்தும் முழு அதிகாரம் பொலிஸ் நிலையப்பொறுப்பதிகாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. நடைமுறைப்படுத்தாத அதிகாரிகளுக்கெதிராகவும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என் தேர்தல் பிரிவிற்குப் பொ[illegible] பிரதி பொலிஸ்மா அதிபர் நவரட்ண தெரிவித்துள்ளார்.

வேட்புமனுத்தாக்கல் செய்யப்படும் ஏழாம் திகதிக்கு முன்னர். நாடு முழுவதும் இருக்கும் சுவரொட்டிகள், பதாதைகள், கட்அவுட்டுக்களை அப்புறப்படுத்த தீமானிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த அவர் அது பற்றி ஏற்கனவே கட்சிகளுக்கு அறிவிக்கப் பட்டள்ளதாகவும் அவர்களாகவே அவற்றை அப்புறப்படுத்தாவிடில் அவற்றை பொலிசார் அப்புறப் படுத்துவார்கள் என்றும்கூறினார்.

அமைதியான, நேர்மையான தேர்தலொன்றை நடத்துமுகமாக இந்த நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாகவும் தேர்தலின்போது பொலிசார் பக்கசார்ப்பின்றி நடந்து கொள்ளல் மற்றும்அவர்களின்கடமைகள்குறித்து அதிகாரிகளைதலைமையகத்திற்கு அழைத்து தற்போது அறிவூட்டல்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் காமினிநவரட்ண தெரிவித்தார்.

இதனிடையே பாதுகாப்பு காரணங்களுக்காக எதிர்வரும் ஆறாம் திகதியிலிருந்து நாடுமுழுவதும் 1,000 வீதித்தடைகள் ஏற்படுத்தவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

## கிளி. பொன்னம்பலம் மருத்துவமனையில் காது, மூக்கு, தொண்டை நோய்களுக்கு சிகிச்சை

கிளிநொச்சியில் அமைந்துள்ள சத்திர சிகிச்சை நிபுணர் பொன்னம்பலம் நினைவு மருத்துவமனையில் அமெரிக்காவில் இருந்து வருகை தந்திருக்கும் வைத்திய நிபுணர் அவர்களால் காது, மூக்கு, தொண்டை தொடர்பான நோய்களுக்குரிய மருத்துவ சிகிச்சைகளும் ஆலோசனைகளும் வழங்கப்படவுள்ளதால் பயன் பெறவிரும்புவோர் இன்றும் நாளையும் காலை 8.00 மணி முதல் பிற்பகல் 2.00 மணிவரை வருகை தருமாறு பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனை நிர்வாகத்தினர் தெரிவிக்கின்றனர்.

## அதிவேக பாதை அமைப்பின் 2 ஆம் கட்டத்திற்கு மேன்முறையீட்டு நீதிமன்று தடை

அமைச்சரவை கேள்விப் பத்திர குழுவின் நடைமுறைக்குமாறாக தென்பிராந்திய அதிவேக பாதையின் அமைப்பின் இரண்டாம் கட்டப் பணிகளுக்கு ஜப்பான் நிறுவனம் ஒன்றுக்கு அனுமதி வழங்கியமைக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் இடைக்கால தடையை விதித்துள்ளது.

கொரிய நிறுவனம் ஒன்று இது தொடர்பில் மனுவைத் தாக்கல் செய்திருந்தது. சுமார் 8 பில்லியன் ரூபா இந்தப் பாதையமைப்புக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. இந்த நிலையில் குறித்த பாதையமைப்புப் பணிகள் ஜப்பான் நிறுவனத்திற்கு வழங்கப் பட்டமையின் பின்னணியில் பாரிய கையூட்டலுக்கு இடமுள்ளதாகத் தெரிவித்தே கொரிய நிறுவனம் இந்த மனுவைத் தாக்கல் செய்திருந்தது.

## சட்டப்பிரேரணை முன்னறிவித்தல் இன்று பாராளுமன்றில்

எதிர்வரும் நவம்பர் மாதம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள வரவு - செலவுத்திட்டத்திற்கான ஒதுக்கீட்டு சட்டப்பிரேரணை முன்னறிவித்தல் இன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இதனை நிதியமைச்சர் சரத் அமுனுகம சமர்ப்பிக்கவுள்ளார். இந்த நிலையில் வரவு செலவுத்திட்டம் எதிர்வரும் நவம்பர் 8 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்பிக்கப் படவுள்ளது. (32)

## தடைநீக்கம்

நாட்டின் அவசரகால சட்டத்தின் கீழ் கூட்டம் மற்றும் ஊர்வலம் ஆகியவற்றுக்கு விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் குறித்த விடயம் தொடர்பில் கடந்த செப்ரெம்பர் 21 ஆம் திகதியி[illegible] சனாதிபதியின் வர்த்தமானி அறிவித்தல் நேற்று [illegible]ளியிடப்பபட்டுள்ளது. (32)

# 2 ஆம் லெப் .மாலதியின் நினைவு நாளை சிறப்பாக முன்னெடுக்க ஏற்பாடு

2ஆம் லெப். மாலதியின் 18ஆவது ஆண்டு நினைவு நாள் நிகழ்வுகளை சிறப்பாக முன்னெடுப்பதற்கான ஏற்பாடுகளை கோப்பாய் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவை மேற்கொண்டுள்ளது. இதற்கான கலந்துரையாடலொன்று நேற்று முன்தினம் கோப்பாயில் இடம்பெற்றது. இங்கு நினைவுநாள் ஏற்பாட்டுக்குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது. இதன்படி 2ஆம் லெப். மாலதியின் நினைவுநாள் நிகழ்வுகள் சிறப்பாக அனுஷ்டிக்கவும் மாலதியின் நினைவுத்தூபியில் நினைவு நாளான ஒக்ரோபர் பத்தாம் நாள் பி.ப 4.00 மணியளவில் முதல் நிகழ்வும் அன்று மாலை ஆறு மணியளவில் சிவன் கோயில் முன்பாக நினைவு நாள் நிகழ்வும் நடைபெறுமென ஏற்பாட்டுக்கு அறிவித்துள்ளது. 2ஆம் லெப். மாலதியின் நினைவு நாளும் தமிழீழ பெண்கள் எழுச்சி நாளுமான ஒக்ரோபர் பத்தை அனைத்து தமிழ் பேசும் மக்களும் உணர்வெழுச்சியுடன் கடைப்பிடிக்குமாறு ஏற்பாட்டுக் குழு அறிவித்துள்ளது. (33)

## கட்சித்தேவைக்கு அலரிமாளிகையை பயன்படுத்துவதற்கு ஐ.தே.க. கண்டனம்

(கொழும்பு)

பிரதமரின் உத்தியோகபூர்வ இல்ல மான அலரிமாளிகை கட்சி செயற்பாடு களுக்காக பயன்படுத்தப் படுவது குறித்து ஐக்கிய தேசியக் கட்சி தமது அதிருப்தியை வெளியிட்டுள்ளது.

இது தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சி பிரதமரின் செயலர் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளது.

அண்மைக் காலமாக அலரிமாளிகையில் நடத்தப்பட்ட இரவு விருந்துபசாரங்களின் போது பொதுமக்களின் பணம் தனிப்பட்ட கட்சி நலன்களுக்கு செலவிடப்பட்டமை தொடர்பில் பிரதமரின் செயலர் தனிப்பட்ட ரீதியில் பொறுப்புக் கூற வேண்டியவராக இருப்பதாகவும் ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.(32)

### பரிசளிப்பு விழா

தமிழீழ வைப்பகத்தின் முதலாவது பள்ளிச்சேமிப்பு அலகு நடவடிக்கையின் இரண்டாவது மாதத்திற்கான அதிஷ்ட கணக்கு தெரிவு செய்யப்பட்டு அன்பளிப்பு பணம் வைப்பிலிடப்படும் நிகழ்வு இன்று பி.ப. 12.30 மணிக்கு கிளிநொச்சி மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இவ் அதிஷ்ட கணக்குகளிற்கான அன்பளிப்புப் பணத்தை நிதித்துறை வணிக ஒன்றியத்தின் இசைவிழி வாணிபத்தினர் வழங்கிக்கௌரவிக்கின்றனர்.

## சக சிப்பாயைச் சுட்டுவிட்டு தானும் தற்கொலை

பொலநறுவை வெலிக்கந்த நாமல்கம இராணுவ முகாமுடன் இணைந்து பணியாற்றும் ஊர்காவற்படை சிப்பாய் மீது மற்றொரு சிப்பாய் துப்பாக்கிச் சூடு செய்து விட்டு தன்னையும் துப்பாக்கியால் தற்கொலை செய்துள்ளார்.

இந்த இரண்டு ஊர்காவற்படை சிப்பாய்களுக்கு இடையில் நீண்ட காலம் நிலவி வந்த குரோதமே இதற்குக் காரணமெனக் கூறப்படுகிறது.

## நகைக்கடை உரிமையாளர் மீது சுன்னாகத்தில் துப்பாக்கிச் சூடு

(நல்லூர்)

சுன்னாகம் பேருந்து நிலையத்திற்கு முன்னால் உள்ள நகைக் கடையொன்றின் உரிமையாளர் இனம் தெரியாதவர்களின் துப்பாக்கிச் சூட்டிற்கு உள்ளாகி யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் ஆபத்தான நிலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று மாலை 6.15 மணியளவில் மிகவும் சன நடமாட்டம் மிக்க இடத்தில் இத்துப்பாக்கிப் பிரயோகம் இடம் பெற்றுள்ளது.

இதில் ஆபத்தான நிலைமைக்கு உள்ளாகியவர் உடனடியாக வைத்தியசாலையில் பொலிஸ் பாதுகாப்புடன் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

இத்துப்பாக்கிச் சூடு இடம்பெற்ற இடத்தில் இருந்து சுமார் 25 மீற்றர் தூரத்தில் இராணுவ காவலரண் இருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

உந்துருளியில் வந்தவர்கள் இருவர் கதைத்துவிட்டு குறிப்பிட்ட இளைஞரான பொன்னுத்துரை சுரேந்திரனை சுட்டுவிட்டுச் சென்றதாகக் கூறப்படுகின்றது. சுன்னாகம் பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளார்கள். (41)

## வீட்டின் மீது தாக்குதல் உறக்கத்திலிருந்தவர் பலி

பொலநறுவை மாவட்டம் வெலிக்கந்தை பிரதேசம் குடாப்பொக்கன கிராமத்தில் நேற்று இரவு 9.00 மணியளவில் வீடொன்றின் மீது இனந்தெரியாத நபர்கள் நடத்திய தாக்குதலில் உறக்கத்திலிருந்த வீட்டின் உரிமையாளரான குடும்பஸ்தரொருவர் கொல்லப்பட்டுள்ளார்.

இச்சம்பவத்தில் காயமடைந்த அவரது மனைவி பொலநறுவை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கொல்லப்பட்டவர் கந்தையா பொன்னுராசா என அடையாளம் காணப்பட்டுள்ளதாக வெலிக்கந்தை சிறிலங்காப் பொலிசார் தெரிவிக்கின்றனர்.

கொல்லப்பட்டவரின் மகன் கருணா குழுவுடன் தொடர்புடையவராக இருந்தவர் என்றும் பின்பு அதிலிருந்து அண்மைக்காலத்தில் விலகிக்கொண்டவர் என்றும் கூறப்படுகின்றது.

சம்பவத்தின்போது கொல்லப்பட்டவரின் மகன் வீட்டிலிருந்து தப்பிச்சென்றுள்ளார். கைக்குண்டுகளை வீசியும் துப்பாக்கிப்பிரயோகம் செய்தும் இந்தத் தாக்குதலை நடத்திய நபர்கள் தப்பிச்சென்றுள்ளனர்.

## வாய்ப்பாட்டில் திட்டமிட்ட பழிவாங்கல் நுண்கலைத்துறை மாணவர் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

இராமநாதன் நுண்கலைத் துறையில் 2004ஆம் ஆண்டு 4ஆம் வருடத்தைப் பூர்த்தி செய்த மாணவர்கள் தமது இறுதிப்பரீட்சையில் தமக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்குத் தீர்வினைக் காணும் பொருட்டு பாதிக்கப்பட்ட 14 மாணவர்கள் நேற்று யாழ்.பல்கலைக் கழக இராமநாதன் மண்டபம் முன்பாக சாத்வீகப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

2004 ஆம் ஆண்டு நான்காம் வருடத்தைப் பூர்த்தி செய்த மாணவர்களாகிய எமக்கு பிரதான பாடமாகிய வாய்ப்பாட்டில் திட்டமிட்டு பழிவாங்கப்பட்டுள்ளமை மறுக்கமுடியாத ஒன்றாகும் எனத் தெரிவித்துள்ள மாணவர் இந்தப் புறக்கணிப்பு தொடர்பாக துறைத்தலைவர், துணைவேந்தர், கலைப்பீடமாணவர் தலைவர், பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் ஆகியோருக்கு எழுத்து மூலமாக தெரியப்படுத்தப்பட்ட போதிலும் இதுவரைகாலமும் தமக்கு சாதகமான தீர்வு எதுவும் கிடைக்கவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

"இந்த நிலையில் எதிர்வரும் ஆறாம் திகதி பட்டமளிப்பு விழா நடைபெற இருக்கின்றது. இதனால் விரக்தியுற்ற இசைத்துறை மாணவர்கள் எமக்குரிய தீர்வினைப் பெறுவதற்காகப் போராட வேண்டியநிலை தோன்றியுள்ளதால் போராட்டத்தை தொடங்கியுள்ளோம்.

எமக்குச் சரியானதும், நியாயமான துமான தீர்வுகிடைக்கப்பெறாதவிடத்து பல்கலைக்கழக நிர்வாக செயற்பாடுகளைப்பாதிக்கும் வகையில் நாம் போராட்டத்தை விரிவடையச் செய்வோம் என பாதிக்கப்பட்ட மாணவர்கள் தெரிவித்துள்ளனர். (கீ)

### சம்பூரில்..

ஒரு கிலோ மீற்றர் நீளமும் 500 மீற்றர் அகலமும் உடைய இந்த ஓடுபாதையில் எச் வடிவில் அமைக்கப்பட்ட இரு உலங்குவானூர்தித் தரிப்பிடங்களும் உள்ளன. இவற்றின் பாதுகாப்பிற்கென பல பங்கர்களும் அமைக்கப்பட்டுள்ளன.

இந்த விமான ஓடுபாதையின் பாதுகாப்பிற்கென 100 தாக்குதல் உறுப்பினர்களைக் கொண்ட குழு நியமிக்கப்பட்டுள்ளது. இந்த விமான ஓடுபாதை அமைக்கப்பட்டுள்ள பகுதி விடுதலைப் புலிகளின் அதியுயர் பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. பொதுமக்கள் இந்தப் பிரதேசத்திற்குள் பிரவேசிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது.

அண்மைய காலங்களில் வடக்கிலிருந்து கடல் மார்க்கமாக தாக்குதல் விமானத்தின் பாகங்கள் சம்பூர் பிரதேசத்திற்கு கொண்டு வரப்பட்டு சேர்த்து வைக்கப்பட்டிருக்கிறது.

எதிர்காலத்தில் யுத்த சூழ்நிலையொன்று ஏற்படுமானால் இந்த சம்பூர் விமான ஓடுபாதையானது திருகோணமலை கடற்படை முகாம், துறைமுகம் மற்றும் ஏனைய பாதுகாப்பு தளங்களுக்கு அச்சுறுத்தலாக அமையக்கூடும்.

### ஒக்...

பாதிக்கும் சமநிலையைக் குழப்பும் அனைத்து திண்மதிரவ கழிவுகளை அகற்றி எமது சூழலைப் பாதுகாக்க அனைவரும் ஒத்துழைக்கும் வண்ணம் வேண்டுகிறோம்.

இச்சூழலைப் பாதுகாக்கும் நாளில் சமூக அமைப்புகள், அரச அரச சார்பற்ற நிறுவனங்கள், தனியார் கூட்டுறவுத் துறைகள், கல்வி நிலையங்கள், வணக்கஸ் தலங்கள், சூழலியாளர்கள், மக்கள் அனைவரையும் ஒன்றிணைந்து செயற்படுமாறு வேண்டுகின்றோம்.

எமது மண்ணை சிதைவடையச் செய்யும் பொலித்தீன் பைகள், கல்நாரிழை (அஸ்பெஸடல்) துண்டங்கள், தகரங்கள், கண்ணாடி சிதறல்கள் போன்ற கழிவுகளை அகற்றி குப்பை கூழங்களை நீக்கியும் கழிவு நீர் தேங்கு நிலைகளை சுத்தப்படுத்தியும் நீர் தேங்காதவாறும் தொற்று நோய்கள் பரவக்கூடிய பொருட்களை அகற்றியும் சூழலை சுத்தமாக வைத்திருப்பதற்கும் அனைவரும் பாடுபடுவோம் எனவும் அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### கைதான...

நான்கு தமிழ் இளைஞர்களும் ஒக்ரோபர் முதலாம் திகதி மாலை 6.45 மணியளவில் கைது செய்யப்பட்டனர். ஒக்ரோபர் இரண்டாம் திகதி காலை 10.30 மணியளவில் துறைமுகப் பொலிசில் கடற்படையினரால் ஒப்படைக்கப்பட்டனர். பின்னர் நான்கு இளைஞர்களும் கடந்த ஞாயிறு மாலை திருகோணமலை நீதிவான் முன் நிறுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். 19,21, 23, 29 வயதினரான நான்கு இளைஞர்களும் ஊர்காவற்றுறை, இருபாலை, முல்லைத்தீவு மற்றும் உயிலங்குளம் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்று துறைமுகப் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. கைது செய்யப்பட்டபோது இவர்களிடம் வீடியோ கமரா, மைக்ரபோன், செல்லுலர் தொலைபேசிகள் இருந்தன என்று பொலிசார் தங்களின் அறிக்கையில் தெரிவித்திருந்தனர். (25)

**மகிந்தவின்...**ராஜபக்ஷவுக்கு ஆதரவு தெரிவிப்பதை தவிர்ப்பதற்காகவே இன்னும் நாடு திரும்பவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.சில வாரங்களுக்கு முன்னர் கடவத்தையில் நடைபெற்ற மகிந்த ராஜபக்ஷவின் பரப்புரைக் கூட்டம் தொடர்பாக அமைச்சர் அநுரா, துணையமைச்சர் சூரியாராச்சியிடம் விளக்கம் கேட்டிருந்தார். சுதந்திரக் கட்சிக்குள் தற்போது தோற்றம் பெற்றுள்ள உள் முரண்பாடுகளாலும், பண்டாரநாயக்க குடும்பத்தைப் பற்றி ஜே.வி.பி.யின் கீழ்த்தரமான பரப்புரைகளினாலும் மனமுடைந்து போயிருக்கும் அமைச்சர் அநுராபண்டாரநாயக்க, மகிந்த ராஜபக்ஷவின் பரப்புரைக் கூட்டங்களில் பங்கேற்பதைத் தவிர்க்கத் தீர்மானித்திருப்பதாகவும் தெரியவருகின்றது.இந்த நிலையிலேயே கட்சித் தலைவியான தனது சகோதரி சந்திரிகா குமாரதுங்கவிடம் தேர்தல் பரப்புரை தொடர்பில் தனது பெயரையோ, படங்களையோ பயன்படுத்த அனுமதிக்க வேண்டாம் எனக் கேட்டு கடிதமொன்றை அனுப்பியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

**குண்டு...**வில் கட்டுநாயக்க வானூர்தி தளத்தில் மீண்டும் தரையிறக்கப்பட்டது.இந்த நிலையில் வானூர்தியில் இருந்து பயணிகள் இறக்கப்பட்டு சோதனை நடவடிக்கைகள் நடைபெற்றன. எனினும் குண்டு எதுவும் கண்டுபிடிக்கப்படாத நிலையில் பயணிகள் வேறு ஒரு வானூர்தியின் மூலம் மாலை 5.48இற்கு லண்டனுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்(32)

## வவுனியாவில் குழு மோதல் சிறி.காவல்துறை அறிவிப்பு

வவுனியாவில் மீண்டும் இளைஞர் குழுக்களுக்கு இடையில் மோதல் சம்பவங்கள் அதிகரித்துள்ளதாக சிறிலங்காக்காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.கடந்த மூன்று நாட்களாக வவுனியா பண்டாரிக்குளத்தில் இடம் பெற்றுவரும் மோதல் காரணமாக மூனறு பேர் காயமடைந்து அதில் ஒருவர் அநுராதபுர வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த சனிக்கிழமை இரவு வீடு ஒன்றின்மீது பெட்ரோல் குண்டுத் தாக்குதல் சம்பவமும் நேற்று முன்தினம் இரவு கடையொன்றின் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. அத்துடன் சாந்தசோலை என்ற இடத்தில் இளைஞர் மத்தியில் மோதல் ஒன்று இடம்பெற்றுள்ளது. (32)

## நடைபெறாது

கிளிநொச்சி மாவட்ட கல்வி, சுகாதாரக்குழுக் கூட்டங்கள் இன்று நடைபெறமாட்டாது எனவும் நடைபெறும் தினம் பின்னர் அறிவிக்கப்படும் எனவும் கிளிநொச்சி அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

### விக்டர்..

இடதுசாரி முன்னணி மற்றும் இலங்கை முற்போக்கு முன்னணி என்பன ஏற்கனவே தமது கட்டுப்பணத்தை செலுத்தியுள்ளன..இதேவேளை எதிர்வரும் ஆறாம் திகதி நண்பகல் 12 மணியுடன் சனாதிபதி வேட்பாளர்கள் கட்டுப்பணம் செலுத்தும் பணிகள் நிறைவடையவுள்ளன.சனாதிபதி வேட்பாளர்களின் வேட்புமனுத்தாக்கல் ஏழாம் திகதி இடம்பெறவுள்ளது.(32)

### ரணிலை...

சந்திரிகா, ரணிலை ஆதரித்தால் ஆறுமுகம் தொண்டமானின் எதிர்கால அரசியல் நடவடிக்கைகளுக்கு உதவியாக இருப்பதாக வாக்களித்ததாகவும் ஜே.வி.பி. வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. நுவரெலியா, கண்டி, மாத்தளை, இரத்தினபுரி மற்றும் பதுளை ஆகிய மலையகப் பிரதேசங்களில் கணிசமான வாக்கு வங்கியை இ.தொ.கா.பெற்றுள்ளதையடுத்தே சந்திரிகா இந்தத் தூண்டுதலில் ஈடுபட்டதாகவும் ஜே.வி.பி.யினர் விசனமடைந்துள்ளனர்.

### சனாதிபதித்...

திக் கொள்கிற ஒப்பந்தங்களால் எவ்வித பயனும் இல்லை என்று மேலும் அவர் கூறினார்.

இதனிடையே சோசலிச சமத்துவக் கட்சியின் சார்பில் சனாதிபதித் தேர்தலில் விஜேடயஸ், முதலாளித்துவக் கட்சிகளால் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது என்று சாடினார்.

பிற இடதுசாரித்தலைவர்களைப் போல் ஏன் மகிந்தராஜபக்ஷவை நீங்கள் ஆதரிக்கவில்லை என்ற கேள்விக்குப் பதிலளித்த விஜே டயஸ் கடந்த தேர்தலில் அவர்கள் சந்திரிகா குமாரதுங்கவின் சேலையைப் பிடித்துத் தொங்கிக் கொண்டிருந்தார்கள். இப்போது மகிந்தராஜபக்ஷவின் சால்வையைப் பிடித்துத் தொங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்றார் அவர்.

### வடமராட்சி...

எரியூட்டப்பட்டுள்ள உழவு இயந்திர இடது பக்க சக்கரத்தின் அருகிலேயே சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இவர் வரணி வடக்கு மாசேரியைச்சேர்ந்தவர் என்றும் யாழ்.பல்கலைக்கழக முதலாம் வருட மாணவன்என்றும் கூறப்படுகிறது. பருத்தித்துறைபொலிசார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (கீ,கா,33)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 04 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.